ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய

19.05.2010 - மலர் 07, இதழ் 11



## கொட்டாவி எப்படி ஏற்படுகின்றது?

## உலகின் முதலாவது பத்திரிகையை பிரசுரித்தவர்

# பாம்புகள் பற்றிய ஆச்சரிய தகவல்கள்



## ஹோர்மோன்கள் ஏற்படுத்தும் உடல் மாற்றங்கள்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பிரதிநிதிகளின் கலந்துரையாடல்


ஒல்லாந்தரின் கீழ் பஸ்நாயக்க நிலமே ஒருவர் இருந்தார். அவருக்கு வெலிகம எனும் ஊரை மன்னன் பரிசாக வழங்கியுள்ளதாக அந்த செய்தி ஓலையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த ஊர் அக்காலத்தில் ஒல்லாந்த வர்த்தக சங்கத்தின்கீழ் இருந்த பிரதேசத்திலேயே இருந்தது. அதனைப் பரிசாக வழங்குவது வர்த்தக சங்கத்தை இழிவுபடுத்தும் செயல் என ஆள்பதி கூறினார். எமது வர்த்தக சங்கம் மன்னனுக்கு அடிபணியும் ஒரு நிறுவனம் அல்ல. அது நட்புறவை ஏற்படுத்தும் ஒரு நிறுவனம் என ஆள்பதி கருத்து வெளியிட்டார். அது மாத்திரமல்ல. வர்த்தக சங்கத்திற்கு கொடுக்க வேண்டிய கடன் தொகையை இன்னும் வழங்கவில்லை. அதனைக் கொடுப்பதற்கு இராஜசிங்க மன்னன் இறுதிவரை தாமதித்துள்ளான் என ஆள்பதி எடுத்துக் கூறினார்.

ஒல்லாந்தருக்கு பிட்டிகல் கோரளையில் கறுவா உரிப்பதற்கு இராஜசிங்க மன்னன் அனுமதி வழங்கி இருந்தான். எனினும், புதிய மன்னனின் சேவையாளர்கள் அதனைத் தடுத்தனர். புதிய மன்னன் அதாவது, விமலதர்மசூரிய மன்னன் வழங்கிய நன்கொடை உறுதிப்பத்திரத்தை என்ன செய்வது என தூதுவர்கள் ஆள்பதியிடம் வினவினர். அதனை ஆவணக் காப்பகத்தில் வைப்புச் செய்யும்படி அவர் பதிலளித்தார்.

அதனை பஸ்நாயக்க நிலமேக்கு வழங்கும்படி கூறியவர்களும் இருந்தனர். அவர்களின் வற்புறுத்தலால் அதனை நிலமேயிடம் கையளிக்க தாம் விரும்புவதாக ஆள்பதி கூறினார். எனினும், அதனை பின்னர் செயலாளரிடம் கையளிப்பதாக வாக்குறுதி ஒன்றையும் நிலமேயிடம் இருந்து பெற்றுக்கொண்டார். இவ்வாறு முதன்முதலாக இருதரப்பினரிடையே நடைபெற்ற அரச மட்டக் கலந்துரையாடல்கள் தூதுவர்களின் விருப்பத்திற்கேற்ப நிறைவேற்றப்பட்டு முடிவடைந்தது.

பிட்டிகல் கோரளையில் கறுவா உரிப்பதற்கு ஒல்லாந்தருக்கு அனுமதி வழங்க தூதுவர்கள் வாக்குறுதி அளித்தனர். அதற்குப் பதிலாக கண்டியில் நடக்கும் 'உபசம்பதா' காலத்தில் 'பேகு' நாட்டில் இருந்து பௌத்த மதகுரு ஒருவரை வரவழைத்துத் தரும்படி வர்த்தக சங்கத்திடம் கேட்டுக்கொண்டனர். அதற்கு வர்த்தக சங்கமும் இணங்கியது. அத்துடன், தூதுவர்கள் புத்தளத்தில் வர்த்தகத்தை சுதந்திரமாக நடத்திச் செல்வதற்கு அனுமதி தரும்படியும் கேட்டுக்கொண்டனர். ஆனால், அதற்கு ஆள்பதி பதில் ஏதும் அளிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆங்கிலத்தில் உ/தரம் கற்பிக்க 554 ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்

ஆங்கிலமொழி மூலத்தில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கற்பிப்பதற்காக புதிதாக 554 ஆசிரியர்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். அதன்படி, எதிர்வரும் மாதங்களில் மேற்படி ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

உயர்தர வகுப்புகளில் வர்த்தகம் மற்றும் விஞ்ஞான பாடங்களைக் கற்பிப்பதற்காகவே இந்த ஆசிரியர்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட வுள்ளனர் என்பதோடு, அதற்கான விண்ணப்பப்படிவங்கள் தற்போதளவி லிருந்து கோரப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிதாக இணைத்துக்கொள்ளப்படு கின்ற ஆசிரியர்கள் பாடசாலை ஒன்றில் சேவையில் அமர்த்தப்பட வேண்டுமா யின், குறித்த பாடசாலையில் குறிப் பிட்ட பாடங்களை ஆங்கிலத்தில் கற்ப தற்காக 20 மாணவர்களேனும் இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

நாடளாவிய ரீதியில் தற்போதளவில் 85 பாடசாலைகளில் உயர்தரத்தில் விஞ்ஞான பாடங்கள் ஆங்கில மொழி மூலத்தில் கற்பிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாவட்டத்திலேயே அதிக டெங்கு நோயாளர்கள்



இலங்கையில் இவ்வாண்டு யாழ்.மாவட்டத்திலேயே டெங்கு நோய்க்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்ப தாக தொற்றுநோய் சிகிச்சைப் பிரிவு அறிவித்துள்ளது.

கடந்த ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான நான்கு மாத காலப் பகுதிக்குள் யாழ்.மாவட்டத்தி லிருந்து மட்டும் 1980 பேர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இதனை அடுத்து கொழும்பில் 1576 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 1548 பேரும் மட்டக்களப்பு மாவட் டத்திலிருந்து 938 பேரும் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும், நாடளாவிய ரீதியில் இவ் எண்ணிக்கை 13,100 ஆகக் காணப்படுவதா கவும் புள்ளிவிபரங்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன.

எனவே, நுளம்புகளைப் பெருகவிடாமல் தமது சுற்றுச்சூழலையும் வசிப்பிடங்களையும் சுத்தமாக வைத்திருக்கும்படி தொற்றுநோய்ப் பிரிவு பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், தற்போதைய சீரற்ற காலநிலையினால் பலரும் பல்வேறு நோய்த்தாக்கங்களுக்கு உட்படுவதாகவும், ஒருவருக்கு காய்ச்சல் ஏற்படும்பட்சத்தில் தவறாமல் அதற்குரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகின்றது.

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# உலகின் ஆழமான கடல் எரிமலைப் பள்ளம்

நிலத்தில் இருப்பது போல எரிமலைகள், மலைகள் போன்றவை கடலுக்குள்ளும் உண்டு. அதன்படி, அண்மையில் 'உலகின் மிக ஆழமான கடல் எரிமலைப் பள்ளம்' கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. இந்த எரிமலைப் பள்ளத்துக்குள் ஒரு ரொபோவை இறக்கி ஆய்வு செய்ததில் பல





வியப்பூட்டும் தகவல்கள் தெரியவந்துள்ளன. குறித்த ஆய்வினை மேற்கொண்ட ரொபோவின் பெயர் 'Autosub 6000'. இங்கிலாந்தின் 'ரோயல் ரிஸர்ச் ஷிப்' அமைப்பே இந்த ரொபோவை வடிவமைத்து ஆராய்ச்சி செய்தது.

தென் அமெரிக்கா அருகே உள்ள கரீபியன் கடல் பகுதியில் கேமேன் ட்ரோ என்ற இடத்தில் இந்த எரிமலைப் பள்ளம் உள்ளது. இது 5 கிலோமீற்றர் ஆழம்கொண்டது. 400°C வெப்பநிலை உடையது. 30 ஆண்டுகளுக்கு முன் கண்டறியப்பட்ட பசுபிக் கடலில் உள்ள ஓர் எரிமலைப் பள்ளமே அதிக வெப்பநிலையை (270°C) கொண்ட தாகவும், அதுவே உலகின் அதிக வெப்பநிலை உடைய எரிமலைப் பள்ளம் என்றும் இதுவரை அறியப் பட்டிருந்தது. ஆனால், தற்போது அந்த சாதனையை கரீபியன் எரிமலைப் பள்ளம் முறியடித்துள்ளது.

இந்த வெப்பநிலையிலும் உருகாத வகையிலேயே குறித்த ஆய்வுப் பணிக்கான ரொபோ தயாரிக்கப்பட் டிருந்தது. ஆய்வில் மற்றுமொரு விடயம் விஞ்ஞானிகளை ஆச்ச ரியப்பட வைத்துள்ளது. அதாவது, இந்த அதிக வெப்பநிலையிலும் கடல் எரிமலையின்





அடியில் சில வகையான உயிரினங்கள் வாழ்கின்றன என்பது தான் அந்த வியப்புக்குரிய விடயம். இவை இதுவரை அறியப்படாத அதிசய உயிரினங்களாகும். அத்துடன், இங்கு உயிரினங்களின் தோற்றத்திற்கான தடயங்கள் கிடைக்கலாம் என்று கருதும் விஞ்ஞானிகள், அதுகுறித்த ஆய்வுகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆசிரியர்களும் 'கெடெட்' படையில் இணைய வாய்ப்பு

நாளைய தினத்தில் சிறந்த தலைமைத்துவத்தை வகிக்கக் கூடிய பண்புகளை, திறமைகளை வழங்கக்கூடிய வாறு பாடசாலை கெடெட் படையில் இணைத்துக்கொள் ளும் செயற்றிட்டத்தின்கீழ், பாடசாலை ஆசிரியர்களுக்கும் மேற்படி கெடெட் குழுவில் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டிருப்பதாக 'பாடசாலைகளுக்கான தேசிய கெடெட் பிரிவு' ஊடக தகவல் குறிப்பொன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு அமைச்சினது ஆலோசனைகளின்கீழ் மேற்கொள்ளப் படுகின்ற மேற்படி திட்டத்தில் 40 வய திற்கு கீழான ஆசிரியர்கள் இணைந்து கொள்ள முடியும். குறித்த கெடெட் பிரிவில் இணைவதன் மூலம் 45 நாட் களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு, ஒருவருட காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் ஜனாதிபதியினால் அதிகாரி தரத்திற்கு (Commissioning Officer) வர்த்தமானி அறிவித்தல் மூலம் நியமிக்கப்படுவர்.

மேலும், உன்னதமான சமூக சேவைகளை ஆற்றுவதன் மூலம் பாடசாலைக்கு சேவை யாற்ற முடிவதுடன், தமது சேவையை விஸ்தரிப்பதற் காக தேவைப்படுகின்ற போது வேறு பாடசாலைக்கு இடமாற்றலையும் பெற முடியும்.

மேற்படி, கெகெட் படையில் இணைய விரும் புகின்றவர்கள் 'இயக்குனர்', தேசிய பாடசாலை கெடெட் பிரிவு, இல-15, துட்டுகெமுனு வீதி, பாமன்கடை, தெஹிவளை என்ற முகவரியிலும் 011-2815346 என்ற தொலைபேசி இலக்கத் திலும் தொடர்புகொள்ள முடியும்.

## 'விஜய்' உடன் கைகோருங்கள்!

உங்களுக்கோர் அரிய வாய்ப்பு

அன்பின் வாசகர்களே!

'விஜய்' வாசகர்களாகிய உங்களிடமிருந்து 'விஜய்' இதழ்கள் குறித்த குறை-நிறைகள், ஆலோசனைகளை விமர்சனங்களாக எதிர்பார்க்கின்றோம். அவற்றை 'விஜய்' இதழில் பிரசுரிக்கவும் எண்ணியுள்ளோம்.எனவே இந்த இதழில் (19.05.2010) வெளியாகி யிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபால் அட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் விமர்சனங்கள் ஒவ்வொரு பக்கத்திலும் பிரசுரமாகியிருக்கின்ற ஒவ்வொரு கட்டுரை பற்றியதாகவோ அல்லது ஒட்டுமொத்த விஜய் பத்திரிகை தொடர்பானதாகவோ இருக்கலாம்.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 26.05.2010.

அனுப்ப வேண்டிய முகவரி:




'விஜய்' வாசகர்,
த.பெ.எண் 2037,
கொழும்பு.



60 நாட்களில் ஆங்கிலத்தை கற்றுக் கொள்ளுங்கள்
இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி
E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத.வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது. (வயது கட்டுப்பாடு தேவையில்லை)
60 நாட்கள் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.
இலவச T.Shirt ஒன்றும் Phone Sim
English Book என்பன இலவசம்


பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும் 30 Easy way English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்
இலவச Phone Sim
மேலதிக விபரங்களுக்கு பெயர்.முகவரியை 0777-220002 க்கு SmS செய்யுங்கள்
இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இலங்கை எனும் பெயர் முதன்முதலில் புராதன கிரந்தமான இராமாயணத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. அது 'வித்யா' மலைச்சாரலுக்கருகே கடல்சூழ நெருங்கும் தீவு இலங்காபுரி என்கிறது. இராவணன் ஆட்சி புரிந்த இலங்கையே இதுவாகும். பின்னர் துவீபவங்ச, மகா வங்ச எனும் பாளி மொழி நூல்கள் லங்கா துவீப, ஒஜ துவீப, வரதுவீப, மண்டதுவீப என்று குறிப்பிட்டன. எனவே, இராமாயணத்தில் 'இலங்கா' என்று குறிப்பிடப்பட்ட சொல்தான் பின்னர் லங்காவாகி இருக்கலாம்.

# இலங்கை - சில புராண சரித்திர ஒற்றுமைகள்

## பாரசமுதர-தாமுபர்ன-தம்பபன்னி

பாரத புராதன நூலான 'அர்த்த சாஸ்திரம்' கடலுக்கு அப்பால் எனப்பொருள்படும் 'பாரசமுதர' என்றே இலங்கையைக் குறிப்பிட்டது. பவைசிமோங்கு, சிமஓங்கு எனும் கிரேக்க சொற்களுக்கு அதுவே அடிப்படையாகும். பின்னர் கிரேக்கர் தப்ரபேன், தப்ரபேனா என்றெல்லாம் இலங்கையை குறிப்பிட்டனர். தாமுபர்ண எனும் பாளிச்சொல் தம்பன்னி என்று மாறி பின்னர் தப்ரபேன் என்றாகியுள்ளது.

## தாம்ர பூமி-தாம்ரபர்ண-தப்ரபேன்-தப்ரபேனா

விஜயன் இலங்கைக்கு வருகை தந்த காலப்பகுதியில் தம்பபன்னி எனும் பெயர் இலங்கைக்கு இருந்ததாக 'மகாவம்சம்' கூறுகிறது. அப்போது தாம்ரபூமி அரசனால் ஆளப்பட்ட அத்தீவு தாம்ரபர்ண என்பதாகும் என்கிறது மகாவம்சம். எனவே, தப்ரபேன் எனும் சொல்லுக்கு தாமுபர்ண-தாம்ரபர்ண, தாம்ரபூமி ஆகியவை அடிப்படையாக இருந்திருக்க வேண்டும். முதலில் தம்பபன்னியாகி இப்பெயர் பின்னர் மருவி தப்ரபேனாகியிருக்கிறது என்றும் கருதப்படுகின்றது. மகா அலெக்ஸாண்டரின் கடற்படைத் தளபதியும்கூட தப்ரபேன் என்றே இலங்கையைக் குறிப்பிட்டுள்ளார். அவரது பெயர் ஒனஸ் கிரீடஸ் என்பதாகும்.

## சிமுண்டு சலிகே ஹெலமண்டல சிஹலதிப

'சிமுண்டு சலிகே ஹெலமண்டல' என்றும் கூறப்பட்டிருந்தது. சந்திரகுப்த மௌரியரின் அரண்மனையில் கிரேக்க தூதுவராகப் பதவி வகித்த மெகஸ்தினீசும்கூட தப்ரபேன் எனும் தீவு பற்றி அறிந்து வைத்திருந்தார். முதலாம் பூகோள ஆராய்ச்சியாளர் எரடோஸ் திஸ்னசும் தப்ரபேன் என்றே குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் இலங்கையின் வரைபடத்தை எழுதிய தொலமியும்கூட தப்ரபேன் என்றே குறிப்பிடுகிறார்.

ஆக, தப்ரபேன் எனும் சொல் நீண்ட காலம் இருந்திருக்கிறது. தம்பபன்னி எனும் சொல் அசோக சக்கரவர்த்தியின் செப்போலைகளிலும் காணப்படுகிறது. கி.மு 268 ஆம் ஆண்டு முதல் 232 ஆம் ஆண்டுவரை அரசாண்ட அவரது ஆட்சி எல்லைக்கு அப்பாலுள்ள தீவு என்றே இதைக் குறிப்பிடுகிறது. தம்பபன்னியிலுள்ள பிக்குகளுக்கு தானம் வழங்கப்பட்டதாக கி.பி இரண்டாம் அல்லது மூன்றாம் நூற்றாண்டுகளுக்குரிய செப்போலைகள் சிலவற்றில் காணப்படுகிறது. ஆறாம் நூற்றாண்டில் 'கிறிஸ்தவ தேச விபரம்' எனும் நூலை எழுதிய கொஸ்மஸ் இன்டிகொப் லெவுஸ்டரும் இலங்கையைத் தப்ரபேன் என்றே கூறுகிறார். ரோமரான பிளினி கி.பி 60 ஆம் ஆண்டு எழுதிய 'த பெரிப்லஸ்' எனும் நூலில் இலங்கையைத் தப்ரபேன் என்றே குறிப்பிடுகிறார்.




## சில தேசம் சிஹிலதேச பலசிமோ மொங்குஸ் சரந்தீவ்

அக்காலத்தில் தென்னிந்தியர்கள் புத்த மதத்தின் பஞ்சசீலக் கொள்கைகள் இலங்கையில் பேணப்பட்டதால் 'சீலதேசம்' என்றனர். அதுவே மருவி 'சிஹிலதேச' என்றாகியது. அதன் பின்னர் ரோமர் தப்ரபேன் எனும் சொல்லைக் கைவிட்டு விட்டு 'பலசிசிமொ மங்குஸ்' என்றனர். அதற்குப் பின் சரந்தீவ் என்றும் குறிப்பிட்டனர். கி.பி 361 ஆம் ஆண்டு சரந்தீவ் எனும் நாட்டிலிருந்து வந்த ஒரு தூதுக்குழு ஜூலியன் எனும் ரோமச் சக்கரவர்த்தியால் வரவேற்கப்பட்டதாக அம்மியாவஸ் மார்வெல்லினி எனும் ரோம வரலாற்றாசிரியர் எழுதியுள்ளார். சிங்ஹல சுவர்ண எனும் சொற்களிலிருந்தே சரண எனும் சொல் உண்டானதாகக் கூறப்படுகின்றபோதும் புது சரண எனும் சொல்லிலிருந்தே அச்சொல் உருவாகியிருக்க வேண்டும் என்றும் கருதப்படுகின்றது.

அரபிகள் ஆறாம் நூற்றாண்டில் இந்துமா சமுத்திரத்தில் பிரதான வர்த்தகர்களாக இருந்தபோது எழுதிய குறிப்புக்களில் சரந்தீப் சரந்தீவ் என்றே குறிப்பிட்டுள்ளனர். ஹியுங்சா எனும் சீன வர்த்தகர் பம்பவு (இரத்தின தீபம்) என்றே தனது 'மேற்குலக பௌத்த பயணம்' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். அரபிகளும் கூட ஜஸீரதுல் யாகூத் (இரத்தினத்தீவு) என்றே இலங்கையை அழைத்தனர். அதனால்தான் சரணுக்கு மூலச் சொற்களாக சுவர்ண எனும் சொல்லும் சிங்ஹல எனும் சொல்லும் முன்வைக்கப்பட்டன. எனினும், சரணம் என்பது புத்தமதத்தவரின் புனிதச்சொல். எனவே, இன, ரீதியிலன்றி மத அடிப்படையிலேயே சரந்தீவ் எனும் பெயர் உருவாகியிருக்க வேண்டும்.




## சியாலான் ஷான் செங்கியாலா சிலன் சைலன் சைலான் சிலோன்

சீன வியாபாரிகள் கி.பி முதலாம் நூற்றாண்டிலிருந்தே இந்து மா சமுத்திரத்தில் வர்த்தகம் புரிந்தனர். அவர்களின் குறிப்புக்களில் சியா.லான்.ஷான் செங் கியாலா என்றெல்லாம் இலங்கையை குறிப்பிட்டுள்ளனர். 1293 ஆம் ஆண்டு கடற்பயணம் புறப்பட்ட மார்க்கோ போலோ சீலன் என்றும் இன்னொரு சஞ்சாரியான டுவாடே பார்போசா சைலன் என்றும் அரபியர், சைலான் என்றும் ஆங்கிலேயர் சிலோன் என்றும் கூறினர்.

## ஹெலதிவ ஈழத்தீவு ஒலுதுகர


சிங்களத்தில் ஹெலதிவ என்பதும் தமிழில் ஈழத்தீவு என்பதும் ஒரு அர்த்தத்தையே குறிக்கிறது. மாலைதீவினர் ஒலுதுகர என்கின்றனர். ஒலு என்றால் ஹெல கர என்றால் தீவு என அர்த்தப்படும்.

**ஏ.ஜே.எம்.நிழாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்கொல்லி உயிரினங்கள் சில...

## நுளம்புகள்



உலகின் ஆட்கொல்லி உயிரினங்களில் முதலாவது இடத்தை வகிப்பது நுளம்புகளாகும். பல்வேறு விதமான நோய்களைப் பரப்புவதில் பெயர்போன ஓர் உயிரினமாக நுளம்பைக் குறிப்பிடலாம். நுளம்பு கடிப்பதால் ஏற்படும் நோய்களால் ஒரு வருடத்திற்கு மட்டும் உலகெங்கும் சராசரியாக 20 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர்.

## ஆசிய நாகம்



ஆட்கொல்லி உயிரினங்களின் பட்டியலில் இரண்டாம் இடத்தை வகிப்பது கொடிய விஷத்தைக்கொண்ட பாம்பு வகைகளில் ஒன்றான ஆசிய நாகமாகும் (Asian Cobra). ஆசிய நாகங்களின் தீண்டலுக்குள்ளாவதால், உலகெங்கும் வருடமொன்றிற்கு 50,000 பேர் வரை மரணிக்கின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## அவுஸ்திரேலியன் பொக்ஸ் ஜெலி்ஃபிஷ்



அவுஸ்திரேலியன் பொக்ஸ் ஜெலிஃபிஷ் (Australian Box Jellyfish) எனும் ஆட்கொல்லி உயிரினம் கொடிய விலங்கினங்களில் பட்டியலில் மூன்றாம் இடத்தை வகிக்கின்றது. அதற்கு 15 அடி நீளமான 60 கொடுக்குகள் காணப்படுகின்றன. ஒரு கொடுக்கில் 60 மனிதர்களைக் கொல்லக்கூடிய அளவு விஷம் அடங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

## வெண் சுறா



ஆழ்கடலில் வாழும் ஒரு மீன் இனம்தான் கொடிய வெண் சுறா (White Shark). இது கடலில் பல மைல்களுக்கப்பால் இருந்தாலும் விரைவில் குருதியை மோப்பம் பிடிக்கக் கூடியது. உலகின் ஆட்கொல்லி உயிரினங்களின் பட்டியலில் இது நான்காம் இடத்தை வகிக்கின்றது.

(அ)

## பாதையில் தேங்கியிருக்கும் நீரில் பல வண்ணங்கள் தோன்றுவது.... ஏன்?

வாகனங்களின் என்ஜின்களிலிருந்து கசிந்த பெற்றோல், டீசல், ஒயில் போன்றவையே பாதைகளில் தேங்கிய நீரில் மெல்லிய படலமாக மிதக்கின்றது. படலமாக இவை காணப்படுவதற்குக் காரணம், பரப்பு இழுவிசையாகும். இப்படலத்துக்கு காற்றோடு தொடர்பு கொண்ட மேற்பரப்பும் நீரோடு தொடர்புகொண்ட கீழ்ப்பரப்பும் உண்டு.

இதன் இரு பரப்புகளிலும் ஊடுருவிப் பிரதிபலிக்கும் ஒளிக்கற்றைகள் படலத்தின் பருமனைப் பொருத்தும்,



கோணத்தைப் பொருத்தும் ஒன்றிணைக்கின்றன. சில நிறங்கள் வலுப்பெற்றும் சில வலுவிழந்தும் காணப்படுகின்றன. இதனால், இப்படலம் வெவ்வேறு நிறங்களில் தோற்றமளிப்பதோடு, நீர்த்துளிகளில் ஏற்படும் நிறப்பிரிகையினால், இதில்வானவில்லை ஒத்த வண்ணங்கள் தோன்றுகின்றன.

## கல்விச் செயன்முறையில் கற்றல்



கல்வியின் பயனைப் பெற கற்றல் சிறப்பாக அமையவேண்டும். "கற்றல் எனப்படுவது படிப்படியாக நடத்தையில் பொருத்தப்பாட்டை அடைவதாகும்" என ஸ்கின்னர் என்பவர் அனுபவ ரீதியாக எடுத்துரைத்துள்ளார்.மனதின் சக்தியால் உந்தப்பட்டு தன் செயல்களால் ஒருவன் பெறும் மாற்றங்களையே 'கற்றல்' என நாம் பொதுவாகக் கூறுகின்றோம். கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின் மூலமாக, கல்வி மனிதனது நடத்தையை சீராக்குகின்றது. மாணவர்கள் தமது எதிர்கால அபிவிருத்தியை கற்றல் மூலமே மதிப்பீடு செய்யமுடியும்.

### கற்றல் என்பது....

ஒருவனிடம் நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடிய அறிவு, மனப்பாங்கு, திறன், பயிற்சி ஆகிய துறைகளில் ஏற்படுகின்ற உறுதியான நடத்தை மாற்றமே (Behavioural Change)



# கல்வி



## முகாமைத்துவம் - 03

## கற்றலுக்கான ஆலோசனைகள்



கற்றல் எனப்படுகின்றது. இதனால், இது 'KASP' எனும் மாதிரியினால் குறிப்பிடப்படுகின்றது. K-Knowledge, A-Aptitude, S-Skill, P-Practical என்பதாகும்.

ஒரு விடயத்தைக் கற்பதற்கு முன்னுள்ள நடத்தைக்கும் அதனைக் கற்றபின் உள்ள நடத்தைக்குமிடையே மாற்றம் காணப்படல் வேண்டும். அவ்வாறு மாற்றம் ஏற்படவில்லையெனில், அங்கு கற்றல் இடம்பெறவில்லை எனக் கொள்ளப்படுகின்றது. கற்றல் என்பதை 'ஒருவரிடம் காணப்படுகின்ற வளர்ச்சி' (A form of growth) எனவும் கூறலாம். ஒருவரது நடத்தையில், முதிர்ச்சியில் ஏற்படுகின்ற மாற்றம் கற்றல் ஆகாது. கற்றல் என்பது பயிற்சி, அனுபவம் என்பனவற்றின் மூலம் ஏற்பட வேண்டும். கற்றலை நேரடியாக அவதானிக்க முடியாது. மாறாக, அதன் விளைவைத்தான் அவதானிக்க முடியும்.

### கற்றலின் அவசியம்

எதிர்வரும் நூற்றாண்டில் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை கல்வி எப்படி அமைதல் வேண்டும் என்பது பற்றி சிந்தித்த, 'யுனெஸ்கோ' நிறுவனம் அதற்காக உலகம் தழுவிய குழுவொன்றை அமைத்து, 'கற்றல்' எனும் தலைப்பில் 22 பக்கங்களைக்கொண்ட அறிக்கையொன்றை 1999 இல் வெளியிட்டது. இவ்வறிக்கையில் பின்வரும் 4 கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

1. அறிவைப் பெறக் கற்றல்
2. செயலாற்றக் கற்றல்
3. கூட்டாக வாழக் கற்றல்
4. சுயம் இழக்காமல் இருக்கக் கற்றல்

இதனூடாக அந்த நிறுவனம் கற்றலில் மாற்றம் செய்வதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

இதன்படி, மனித நடத்தையின் முக்கிய செயலாக இருப்பது கற்றலாகும். நமது நம்பிக்கை, நோக்கம், கொள்கைகள்,ஆளுமைக் குணாங்கள் மற்றும் புலன்காட்சி ஆகிய அனைத்திலும் கற்றல் முக்கிய பங்கு வகிக்கின்றது.

கற்றலானது அறிவை அவதானிப்பதோ, ஒரு நூலை வாசிப்பதோ, சான்றிதலைப் பெறுவதோ, அறிவுரையைக் கேட்பதோ அன்று. அது அனுபவத்தை அதிகரித்தலாகும். இக்கற்றலின் ஆரம்பக் களம் பாடசாலையாகும்.

மனிதன் பரிணாமச் செயல்முறையில் இன்று வரை உயர்ந்த இடத்தில் இருப்பதன் காரணம் கற்றலாகும். அதுவே மனிதனது சிறப்பை இன்று வரை தேச ரீதியில் பரவச் செய்கின்றது.



எனவே, ஒவ்வொரு மாணவரும் புதிய கருத்துக்கள், விடயங்கள் பற்றி தாமாக விளங்கிச் செயற்படும் ஆற்றலைக் கட்டியெழுப்புவதே கற்றலின் முதன்மைச் சிந்தனையாகும். அச்சிந்தனையை வலுப்படுத்தி, செயற்படுத்துவது ஒவ்வொரு மாணவரினதும் எண்ணத்தில்தான் தங்கியுள்ளது.

(தொடரும்...)

-எம்.ஏ.எஃப்.சப்ரானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோர்மோன்கள் மற்றி ...

**ஹோர்மோன்கள் நமது உடலுக்கு அத்தியாவசியமான ரசாயனத் திரவமாகும். இவை உடலின் சமநிலைத் தன்மையைப் பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. ஆனாலும், சில சந்தர்ப்பங்களில் தேவைக்கு அதிகமாக ஹோர்மோன்கள் சுரப்பதால் பல்வேறு விதமான நோய்கள் ஏற்படுகின்றன. நமது உடலில் காணப்படும் பிரதானமான ஹோர்மோன்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றிப் பார்ப்போம்.**

## ஹோர்மோன் என்றால்?

ஹோர்மோன் என்பது நமது உடலில் உள்ள சில எலும்புகளின் மூட்டுக்கள் மற்றும் சுரப்பிகளில் இருந்து வெளிப்படும் ஒரு வகையான ரசாயனத் திரவமாகும். ஹோர்மோன்கள் நமது உடல் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானவை. இவை உடலில் ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு குருதியின் ஊடாகவே செல்கின்றன. ஹோர்மோன்கள் சிறிய காபன் அணுக்களைக்கொண்டு உருவானவையாகும்.

## பிடியுடரி சுரப்பி

பிடியுடரி என்பது நமது மூளையின் கீழ்ப் பாகத்தில் அமைந்துள்ள சிறிய பகுதியாகும். இந்த பிடியுடரி சுரப்பியில் இருந்து பல வகையான ஹோர்மோன்கள் சுரக்கின்றன. பொலிகள் ஸ்டிமியுலேடின், லியுடினய்சின், புரோலக்டின், தய்ரோய்ட், ஸ்டிமியுலேடின், அட்ரினோ கொரிடிகோரொபிக் ஆகிய ஹோர்மோன்களே அவையாகும்.

## ஹய்போதலமஸ்

ஹய்போதலமஸ் என்பது பிடியுடரி சுரப்பிக்கு அருகாமையில் அமைந்துள்ள மூளைக்குரிய பகுதியாகும். இது மூளையைச் செயற்பட வைக்கவும் நரம்புகளின் இயக்கத்திற்கும் உதவுகின்றது. பசி, தாகம், நித்திரை, உடல் உஷ்ணநிலை என்பவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு 'ஹய்போதலமஸ்' உதவியாக இருக்கின்றது. ஹய்போதலமஸின் மூலம் உற்பத்தியாகும் ஹோர்மோன்கள் பல பிடியுடரி சுரப்பிகளால் வெளியேற்றப்படும் ஹோர்மோன்களின் அளவைக் கட்டுப்படுத்த உதவியாக இருக்கின்றது. ஹய்போதலமசின் மூலம் உற்பத்தியாகும் அன்டியுரேடிக் (Antiadiuretic Hormone) ஒக்சிடோசின் ஹோர்மோன் (Axytocin Hormone) ஆகியவற்றை பிடியுடரி சுரப்பிகள் சேமித்து வைக்கின்றன. குருதியில் உள்ள நீரின் அளவு குறைவடையும்போது 'அன்டியுரேடிக்' ஹோர்மோன் வெளிப்படுத்தப்படுகின்றது. அந்த ஹோர்மோன் சிறுநீரகத்திற்குள் தொழில்பட்டு அங்கிருந்து சுரக்கும் நீரை மீண்டும் குருதிக்கு உறிஞ்சும் தொழிற்பாட்டைச் செய்கின்றது. அதனால், உடம்பில் இருந்து வெளியேறும் சிறுநீரின் அளவு கட்டுப்படுத்தப்படுகின்றது. அத்துடன், 'ஒக்சிடோசின்' என்ற ஹோர்மோன் பெண்களுக்கு கருக்கட்டல் காலத்தில் கருப்பையை விரிவடையச் செய்து கருவளர்ச்சியை இலகுபடுத்துகின்றது. இந்த ஹோர்மோன்களைத் தவிர இன்னும் சில ஹோர்மோன் வகைகளும் உள்ளன.



## தைரொய்ட் சுரப்பியில் சுரக்கும் ஹோர்மோன்

தைய்ரொய்ட் சுரப்பியில் தைரொக்சின் மற்றும் கல்சிடோனிச் ஹோர்மோன்கள் சுரக்கின்றன. தைரொக்சின் ஹோர்மோனானது உடல் ரீதியாக நிகழும் இயக்கத்திற்கு அவசியமானது. உடலின் பலத்தைத் தூண்டுதல் சக்தித் தொழிற்பாடு மற்றும் குளுகோஸ்,கொழுப்பு ஆகியவற்றை சுரக்கச் செய்து கலங்களின் தொழிற்பாட்டை விரைவுபடுத்துகின்றது. அத்தோடு 'புரோட்டீன்கள்' உற்பத்தியாவதற்கும் சதைப்பிண்டத்தின் வளர்ச்சி, உறுதிப்பாடு என்பனவற்றுக்கும் தைரொக்சின் மூலகாரணமாக அமைகின்றது.அதேபோன்று, 'கல்சிடோனின்' ஹோர்மோன் குருதியில் கல்சியத்தின் அளவை அதிகரிக்கச் செய்கின்றது.

## பரதைரொய்' சுரப்பியில் சுரக்கும் ஹோர்மோன்

தைரொய்ட் சுரப்பிக்குப் பின்பக்கமாக 'பரதைய்ரொய்ட்' ஹோர்மோனானது குருதியில் கல்சியப் படிவை அதிகரிக்கச் செய்வதற்கும் பொஸ்பேட் படிவதைக் குறைப்பதற்கும் உதவியாக அமைகின்றது.

## கோடிசோல் ஹோர்மோன்

கோடிசோல், அல்டெஸ்ட்டெரோன், அடினலின், நோஅட்ரிநலின் ஆகிய ஹோர்மோன் வகைகளும் உற்பத்தியாகின்றன. கோடிசோல் ஹோர்மோன் புரோட்டீன் சிறிய பிரிவுகளாவதைத் தடுப்பதோடு, 'கிளய்கோஜன்' உற்பத்தியாவதையும் கட்டுப்படுத்துகின்றது. சிறுநீரகத்தில் இருந்து சோடியம் வடிபட்டுச் செல்வதைத் தடுத்துப் பாதுகாக்கும் தொழில்பாட்டுககு 'அல்டோஸ்ரொரோன்' என்ற ஹோர்மோன் உதவி புரிகின்றது.

அத்துடன், உடம்பின் சவ்வுப் பகுதிகளில், படலங்களில் தேவைக்கு அதிகமாக பொட்டாசியம் தேங்காமல் பாதுகாக்கின்றது. 'அடினலின்' ஹோர்மோனானது இருதயத்துடிப்பை துரிதப்படுத்துகின்றது. அத்துடன், சதையிலும் கலங்களிலும் குருதிப்போக்கை ஒழுங்காக மேற்கொள்ளவும் உதவுகின்றது. இருதயத்திலும் சதைகளுக்குள்ளும் இருக்கும் சிறிய நரம்புகளுக்குள் குருதி ஓட்டத்திற்கும் காரணமாகின்றது. குருதியில் குளுக்கோசின் அளவை அதிகரிக்கச் செய்கின்றது.'நோர்அடினலின்' என்ற ஹோர்மோனானது சிறிய பகுதிகளுக்கு குருதிப்போக்கை நிகழச் செய்யவும் குருதி அழுத்தத்தை அதிகரிக்கவும் காரணமாக அமைகின்றது.

## சுருக்கமான சுரப்பியில் சுரக்கும் ஹோர்மோன்


இங்கு இன்சுலின் மற்றும் குளுகாகன் ஆகிய இருவகை ஹோர்மோன்கள் சுரக்கின்றன. இதில் இன்சுலின் குருதியில் உள்ள குளுக்கோசின் அளவைக் குறைத்து, கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவுகின்றது. அதேபோன்று, கலங்கள் வாயிலாக குருதியில் உள்ள குளுக்கோசை உறிஞ்சி எடுக்கவும் செய்கின்றது. குளுகோசன் என்ற ஹோர்மோன் குருதியில் குளுக்கோசின் அளவை அதிகரிக்கச் செய்கின்றது. அத்தோடு, கல்லீரலில் உள்ள 'கிளய்கோஜன்' திரவத்தை குளுக்கோசாக மாற்றவும் உதவுகின்றது.

## பித்தத்தில் சுரக்கும் ஹோர்மோன்

பித்தத்தில் 'கெஸ்ரின்' என்ற ஹோர்மோன் சுரக்கின்றது. இந்த ஹோர்மோன் பித்தத்தைத் திண்மத் தன்மையாக்குவதை துரிதப்படுத்துகின்றது.

## குடல் வாயில் சுரக்கும் ஹோர்மோன்

சிறிய குடல்கள் ஆரம்பமாகும் இடம் 'குடல் வாய்' எனப்படுகின்றது. இதில் செகரின் கொலிசிஸ்டோகய்ன் ஆகிய ஹோர்மோன்கள் உற்பத்தியாகின்றன. 'செகிரின்' என்ற ஹோர்மோன் பித்த நீர் அதிகம் சுரப்பதைக் கட்டுப்படுத்துகின்றது. அந்த பித்த நீர் திரவத்தன்மை




அடைந்து ஆவியாக உடலில் இருந்து வெளியேறிச் செல்கின்றது. கொலிசிஸ்டோசய்ன் ஹோர்மோனானது பித்தநீரை குடல்களுக்கு திரவமாகச் செல்லத் துணைபுரிகின்றது.

## சிறுநீரகத்தில் உற்பத்தியாகும் ஹோர்மோன்

ரெனின் மற்றும் எரித்ரோபொயடின் ஆகிய ஹோர்மோன்கள் சிறுநீரகத்தில் இருந்து சுரக்கின்றன. இதில் ரெனின் ஹோர்மோன் 'என்ஜியோடென்கினோஜன்' என்ற திரவத்தை என்ஜியோடென்சின்னாக மாற்றமடையச் செய்கின்றது. 'எரித்ரோ பொஎடின்' என்ற ஹோர்மோனானது மூட்டுக்களில் உற்பத்தியாகும் திரவத்தை அதிகரிக்கச் செய்கின்றது.

## கருப்பையினுள் சுரக்கும் ஹோர்மோன்கள்

கருப்பையினுள் ஈஸ்ரஜன், புரொஜெஸ்டொரோன் ஆகிய ஹோர்மோன்கள் உற்பத்தியாகின்றன. 'ஈஸ்ரஜன்' என்ற ஹோர்மோன் பெண்களின் அங்க, உடல் வளர்ச்சியை துரிதப்படுத்துகின்றது. 'புரோஜெஸ்ரோன்' எனும் ஹோர்மோன் கருப்பையினுள் தடைகள் ஏற்படாமலும் கருக்கட்டலுக்கு ஏற்ற விதமாக கருப்பையைத் தயார்படுத்தல் ஆகிய தொழிற்பாடுகளையும் செய்கின்றது.







பிஸ்மியால் பீடிக்கப்பட்டு குள்ளத்தன்மை




கழலைக் கட்டி



குடல் வீக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அறிந்துகொள்வோம்




### சிசு வளர்ச்சிக்கு உதவும் ஹோர்மோன்கள்

கொரியோனிக் கொனட்ரோரோவின், ஹியுன் ஸ்லாசென்டல் லக்டோஜன் ஆகிய ஹோர்மோன்கள் கர்ப்பகாலத்தில் கருப்பையில் நிகழும் பல்வேறு தொழிற்பாடுகளைச் செய்கின்றன. இதில் 'கொரியோனின் கொனிட்ரோரோவின்' ஹோர்மோன் கருப்பையில் கரு வளர்ச்சிக்குத் தேவையான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

'ஹியுமன் பிலசென்டல்' ஹோர்மோனானது பெண்ணில் பாலூட்டுவதற்கான கலங்களைத் தூண்டுகின்றது. இத்தகைய தொழிற்பாடுகளால் கரு நல்லமுறையில் சிசுவாக வளர்ச்சியடைவதோடு, பிரசவத்தையும் இலகுபடுத்துகின்றது.




### ஹோர்மோன்களால் ஏற்படும் நோய்கள்

ஹோர்மோன்களால் உடலில் பல்வேறு விதமான நன்மைகள் நிகழ்வது போன்று, அளவுக்கு அதிகமாகச் சுரக்கும் ஹோர்மோன்கள் காரணமாக வெவ்வேறு விதமான நோய்களும் ஏற்படுகின்றன.

### தைரொக்சினால் ஏற்படும் நோய்

'தைரொக்சின்' ஹோர்மோன் உடலில் தேவைக்கு அதிகமாகச் சுரக்கும்போது இருதயத்துடிப்பு அதிகரிக்கின்றது. அப்போது சுவாச வேகமும் உயர்வடைந்து உடல் உஷ்ண நிலை அதிகரிக்கின்றது. இத்தகைய நிலையால் பீடிக்கப்படும் நோயாளிகள் எப்போதும் பதற்றமுடைய வர்களாக இருப்பார்கள்.

அத்துடன், அவர்களின் உடலில் வியர்வை அதிகமாகச் சுரக்கும்.அதிகமாகப் பசி எடுக்கும். இருதயம் அளவுக்கு அதிகமாக வேகமாகத் துடிக்கும்போது விரைவில் இருதயக் கோளாறுகள் ஏற்பட்டு இருதயம் பாதிக்கப்படும். இந்த நோய் நிலை 'தைரோடொக்சிகோகிஸ்' என்றழைக்கப்படுகின்றது.

அதேநேரம், மகப்பேற்றுக் காலத்தில் தைரொக்சின் குறைபாடு இருந்தால் குழந்தையின் உடல் வளர்ச்சி குன்றுவதோடு, அக்குழந்தை மந்த புத்தியுடையதாகவும் இருக்கும். அதனால், மூளைவளர்ச்சி பாதிப்படையும். இது 'கிரேடின்' என்றழைக்கப்படுகின்றது. இதனை ஆரம்பகட்டத்தில் அடையாளம் கண்டு தைரொக்சின் ஊசி மூலம் பாதிப்பைத் தடுத்து குறைபாட்டை நிவர்த்திக்கலாம்.

உடல் வளர்ச்சியடைந்தபின்னர் தைரொக்சின் குறைபாடு ஏற்பட்டால் 'மிக்சிமீமா' என்ற நோய் ஏற்படும். அதன் காரணமாக இதயத்துடிப்பின் வேகம் குறைவடையும் அத்துடன், குருதியில் உஷ்ணம் குறைவடைதல், உடல், உளவளப் பாதிப்புக்கள், உடல் எடை (பாரம்) குறைவடைதல், உடல் தசைகள் விறைத்தல், தலைமயிர் உதிர்தல் போன்ற நோய்கள் ஏற்படும். அத்துடன், தைரொய்ட் அதிகரித்தல் அல்லது குறைவடைதல் காரணமாக தைரொய்ட் சுரப்பிகளும் பாதிக்கப்பட்டு கீழ்வாத நோய் ஏற்படும்.

### இன்சுலின் குறைபாடு

இன்சுலின் ஹோர்மோன் பான்டின் மற்றும் பெஸ்டிமக்லோய்ட் ஆகியோரால் 1921 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இன்சுலின் ஹோர்மோன் உடலில் குளுக்கோசின் அளவைக் குறைக்கின்றது. இன்சுலின் குறைபாடு காரணமாக நீரிழிவு நோய் ஏற்படும். அதிக தாகம் எடுத்தல், அதிகம் சிறுநீர் வெளியேறல், உடல் பாரம் குறைதல், உடல் தளர்வு போன்றவை நீரிழிவு நோயின் அறிகுறிகளாகும். சில சந்தர்ப்பங்களில் இந்த அறிகுறிகள் வெளிப்படாமலும் நீரிழிவு நோய் இருக்கும். குருதியில் உள்ள குளுக்கோசின் அளவைக் கண்டறிவதன் மூலம் இந்நோயைக் கண்டுபிடிக்கலாம்.

### அக்ரோ மெகலி

உடல் வளர்ச்சிக்கான ஹோர்மோன்கள் அளவுக்கு அதிகமாகச் சுரந்தால் 'அக்ரோ மெகலி' என்ற நோய் ஏற்படுகின்றது. அதேபோன்று, உடல் பருமன் அதிகரித்தல், அசாதாரண உடல் வளர்ச்சி, உடல் தளர்வு என்பன இந்நோயின் அறிகுறிகளாகும். குழந்தைப் பருவத்தில் இந்த ஹோர்மோன் அதிகம் சுரப்பதால் உடல் வளர்ச்சி வயதை விட அதிகம் காணப்படும்.

### டிவோபிஸ்மி

உடல் வளர்ச்சி ஹோர்மோன் குறைவாகச் சுரப்பதால் 'டிவோபிஸ்மி' என்ற நோய் ஏற்படுகின்றது. வயதுக்கேற்ற உடல் வளர்ச்சி இன்மை காரணமாக குள்ளமான தன்மை காணப்படும்.

### நியோபிளாம்ஸ்

தசைகளில் ஏற்படும் 'நியோபிளாம்ஸ்' என்ற கட்டிகள் காரணமாக அதிக ஹோர்மோன்கள் சுரக்கின்றன. இத்தகைய கட்டிகள் புற்றுநோயாகவும் மாற்றமடையும்.

### பிடியுடரி தசையில் உற்பத்தியாகும் ஹோர்மோன்கள்

**பொலிகல் ஸ்டிமியுலேடின் ஹோர்மோன் (Follicle Stimulating Hormone)**

இந்த ஹோர்மோன்கள் ஆணின் உயிரணுக்களை அதிகரிக்கச் செய்வதோடு, பெண்களின் கருப்பையை விரிவடையவும் செய்கின்றன.

**லியுடினய்சின் (Luteinising Hormone)**

பெண்களின் ஈஸ்ரஜன் மற்றும் புரொஜெஸ்ரோன் ஹோர்மோன்கள் வளர்ச்சியைத் தூண்டி மாதவிடாய் வெளியேறுவதைத் தூண்டுகின்றது.

**புரோலக்டின் (Prolectine Hormone)**

தாய்ப்பால் சுரக்கச் செய்வதற்கும் உறைவதற்கும் உதவி புரிகின்றது.

**தைரொய்ட் ஸ்டிமியுலேடிங் (Thyroid Stimulating Hormone)**

தைரொய்ட் ஹோர்மோன் சுரக்கச் செய்வதோடு, உடல் வளர்ச்சியையும் தூண்டுகின்றது.

**அடினோ கோர்டிகோடொபிக் (Adrinocorti Cotropic Hormone)**

தசைநார் மற்றும் மூட்டுக்கள் பலமடைவதற்கும் வளர்ச்சிக்கும் காரணமாக அமைகின்றது.

**வளர்ச்சி ஹோர்மோன் (Growth Hormone)**

உடல் வளர்ச்சியைத் தூண்டும் ஹோர்மோன்கள். குறிப்பாக கை, கால், எலும்புகளைப் பலமடையச் செய்கின்றன.

அமீர் ஹுசைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஐவரி கோஸ்ட்




**அரசு:** ஒரு சட்ட சபைகொண்ட பல கட்சிக் குடியரசு.
**சுதந்திரம்:** பிரான்சிடமிருந்து-1960 ஓகஸ்ட் 7.
**தேசிய பெயர்:** ரிபப்லிக் டி கோட் டி ஐவரி (Republic of cote d Ivoire)
**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினம், ஓகஸ்ட் 7.



**ஜனாதிபதி** (2000): லோரண்ட் ஜிபாபோ.
**பிரதமர்:** கிலாயூமி கிக்பஃபோரி சோரோ




## புவியியல்

இந்நாடு மேற்கு ஆபிரிக்காவில் கினியா வளைகுடாவில் அமைந்துள்ளது. இது தென் பகுதியை நோக்கிய கடற்பரப்பைக் கொண்டுள்ளது. **மேற்கு**-கினியா, லைபீரியா; **வடக்கு**-மாலி, புர்கினா ஃபெஸோ; **கிழக்கு**-கானா என்பன எல்லைகளாக அமைந்துள்ளன. தெற்கில் ஒடுங்கிய கரையோரப் பகுதியைக் கொண்டுள்ளதோடு, உட்பாகத்தில் அடர்ந்த காடுகளையும் கொண்டுள்ளது, வடக்கே சவன்னா புல்வெளிகள் காணப்படுகின்றன.

நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் காடுகளுடன்கூடிய மேட்டு நிலங்களையும் அட்லாண்டிக் சமுத்திரத்தின் கரையோரப்



பிரதேசத்தை நோக்கி சாய்வான தரைத்தோற்ற அமைப்பையும் காணலாம். பண்டாமா, கோமோ மற்றும் சசண்ட்ரா உள்ளிட்ட பல பெரும் நதிகள் மேட்டு நிலங்களில் உற்பத்தியாகி கடலை நோக்கிச் செல்கின்றன. லொக் டி இபையர் மற்றும் லொக் டி கொஸ்ஸோ உள்ளிட்ட பெரும் ஏரிகளும் இங்கு காணப்படுகின்றன.


**மொத்தப் பரப்பு:** 124,502 சதுர மைல் (322,460 ச.கி.மீ);
**நிலப்பரப்பு:** 122,780 ச.மைல் (318,000 ச.கி.மீ).

**தலைநகரம்:** யாமோ சௌக்ரோ; **பெரிய நகரங்கள்:** அபிட்ஜான், பொவாகே, டாலோவா, கோர்ஹோகோ.
**உயர் மையம்:** நிம்பா மலை (1,752 மீற்றர்);
**தாழ் மையம்:** கினியா வளைகுடா.
**நிலப்பிரிவுகள்:** 58 பகுதிகள்.
**மக்கள் தொகை** (2009): 20,617,068.
**நாணயம்:** CFA பிரேங்.
**இணையத்தள TLD குறியீடு:** .ci
**தொலைபேசி குறியீட்டு இலக்கம்:** 225
**மொழிகள்:** பிரெஞ்ச் (அலுவலக மொழி) மற்றும் ஆபிரிக்க மொழிகள்.
**இனங்கள்** (1998): அக்கான் 42.1%, வோல்டைகியூஸ் (குர்) 17.6%, வட மென்டெஸ் 16.5%, க்ரொஸ் 11%, தென் மென்டெஸ் 10%, ஏனையோர் 2.8% (இவர்களில் 130,000 லெபனானியர்களும் 14000 பிரான்சியரும் அடங்குவர்).
**சமயங்கள்:** உள்ளூர் சுதேச மதநம்பிக்கைகள் 25%-40%, இஸ்லாம் 35%-40%, கிறிஸ்தவம் 20%-30%
**எழுத்தறிவு** (2003): 51%.
**தேசிய சின்னங்கள்:** **பறவை**-White-cheeked Turaco, **மிருகம்**-ஆபிரிக்க யானை; விளையாட்டு, மரம், மலர் என்பன பிரகடனப்படுத்தப்படவில்லை.
**தேசிய கீதம்**
Salut o terre d'esperance;
Pays de l'hospitalite.
Tes legions remplies de vaillance
Ont releve ta dignite....என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

1893 முதல் 1960ஆம் ஆண்டு சுதந்திரம் பெறும் வரை பிரான்ஸ் நாட்டின் காலனி நாடாக ஐவரி கோஸ்ட் திகழ்ந்தது. 1985 இல் நாட்டின் பெயர் பிரெஞ்ச் மொழியில் மாற்றம் செய்யப்பட்டது. ஐவரி கோஸ்ட் என அதுவரை காலமும் அழைக்கப்பட்ட இந்நாடு கோட் டி ஐவரி (Cote D'Ivoire) என புதிய பெயர் பெற்றது. சுதந்திரம் அடைந்தது முதல் 1993 வரை ஃவெலிக்ஸ் ஹியூஃபோ போய்னி நாட்டின் அதிபராக இருந்தார். 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜெனரல் ரொபர்ட் குயி அதிகாரத்தைக் கைப்பற்றினார்.




## கலாசாரம்

பல்வேறுபட்ட இனக்குழுக்களின் கலாசாரமே இங்கு நிலவுகின்றது. அறுபதுக்கும் மேற்பட்ட வெவ்வேறான இனக்குழுக்கள் ஐவரி கோஸ்ட்டில் வாழ்கின்றன. இந்த அறுபதுக்கும் மேற்பட்ட இனக்குழுக்களை ஏழு வலய இனக்குழுக்களுக்குள்




அடக்கலாம். இவை ஒன்றுக்கொன்று மாறுபட்ட சூழல், பொருளாதார நடவடிக்கைகள், மொழி, கலாசாரப் பண்பாட்டு பாரம்பரிய ஒழுக்க விதிகளைக் கொண்டவையாகும்.

## காலநிலை

கரையோரப் பிராந்தியங்களில் வருடம் முழுவதும் வெப்பநிலை நிலவும். மே மாதம் முதல் ஜூலை வரை கடும் மழை பொழியும். காடுகள் அடர்ந்த மத்திய பிராந்தியத்தில் வெப்பநிலை விட்டுவிட்டு நிலவுவதோடு, மார்ச் முதல் மே வரையிலான காலப்பகுதியில் கடும் மழை பொழியும். நாட்டின் வட பகுதியில் எந்நாளும் உயர் வெப்பநிலையே நிலவுகின்றது.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2003): **பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்**- 328,000; **செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்:** 1.236 மில்லியன். **வானொலி நிலையங்கள்** (1998): AM 2, FM 8, SW 3. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1999): 14. **இணையத்தள வழங்குனர்** (2004): 3795. **இணையத்தளப் பாவனையாளர்கள்:** 90,000.

## போக்குவரத்து

**புகையிரதப் போக்குவரத்து பாதைகள்** (2004): மொத்த நீளம் 660 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்** (1999): மொத்த நீளம் 50,400 கி.மீற்றர். (இதில் செப்பனிடப்பட்டவை-4889 கி.மீற்றர்; செப்பனிடப்படாதவை. 45511 கி.மீற்றர்)

**நீர்வழிப் போக்குவரத்துப் பாதை** (2003): 980 கி.மீற்றர். **துறையும் துறைமுகமும்** (2004): அபிட்ஜான், அபொய்ஸோ, டபேங் சன்-பீட்ரு.
**விமான நிலையங்கள்:** 37.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 10%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** கோப்பி, கொக்கோ, வாழைப்பழங்கள், நெல், சோளம், மரவள்ளி, வற்றாளைக்கிழங்கு, சீனி, பருத்தி, றப்பர், உயர்ரக மரவகைகள். **தொழிலாளர் தொகை:** 6.95 மில்லியன். **வேலையற்றோர்:** 40-50%. **கைத்தொழில்கள்:** எண்ணெய் சுத்திகரிப்பு, புடவை வகைகள், உரவகைகள், கட்டடப்பொருட்கள், மின்சாரம், கப்பல் கட்டுதல் மற்றும் பழுதுபார்த்தல். **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், இயற்கை வாயு, வைரக்கற்கள் உட்பட சில உலோகங்கள். **ஏற்றுமதிகள்** (2005): கொக்கோ, பருத்தி, வாழைப்பழம். **இறக்குமதிகள்** (2005): எரிபொருள், மூலப்பொருட்கள், உணவுப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்:** பிரான்ஸ், நெதர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா, நைஜீரியா, இத்தாலி, தாய்லாந்து.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

✱ அப்ரோன் தூபி ✱ பெங்கோ தேசிய பூங்கா ✱ பியன்கோமா முகமூடி நடன நிலையம் ✱ Basilique de Notre Dame de la Paix ✱ சென்.போல் தேவாலயம் ✱ க்ரேண்ட் மார்ச் ✱ க்ரேண்ட் பஸ்ஸம் கடற்கரை ✱ பெகோ மலை தேசிய பூங்கா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதல் பத்திரிகையைப் பிரசுரித்தவர்







உலகின் முதலாவது பத்திரிகை தற்போது உள்ள பத்திரிகைகளைப் போன்று இருக்கவில்லை. அது செய்திகள் அடங்கிய கடிதம் போலவே இருந்தது. கிறிஸ்துவுக்கு முன் ஐந்தாம் நூற்றாண்டில் ரோமர்கள் செய்திகளைக் கடிதமாக எழுதி நகரிலிருந்து பல்வேறு பகுதிகளில் உள்ளோருக்கு அனுப்பினர். ஓரளவேனும் தற்போதைய பத்திரிகைக்கு சமமாக இது பிரசுரமானது. கிறிஸ்துவுக்கு அறுபது வருடங்களுக்கு முன்பும் ஜூலியஸ் சீசரின் ஆட்சியில் அவரின் அனுசரணையுடன் செய்திக்கடிதங்கள் வெளியிடப்பட்டன. அரச அறிவிப்புக்கள் அக்காலங்களில் நகரின் சுவர்களில் ஒட்டப்பட்டன. இது Acta Diurna என அழைக்கப்பட்டது. அதன் அர்த்தம் 'தினசரி நிகழ்வு' என்பதாகும்.

அக்கால வியாபாரிகள் அன்றாடச் செய்திகளை அறிய பல சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டி இருந்தது. அதற்காக செய்திக் கடிதத்தை முதல் செய்திப்பத்திரிகையாக சர்வதேச வங்கியான 'புகர்ஸ்' எனும் ஜேர்மன் அமைப்பு ஆரம்பித்தது.

அதேகாலகட்டத்தில் வெனிஸ் மக்கள் 'கெசடா' என்ற ஒன்றைக் கொடுத்து அரசு தினசரி பிரசுரித்த அறிவிப்பை வாசித்தனர். அத்தகைய அறிவிப்பு உள்ளடக்கப்பட்ட பத்திரிகை 'Notizie Saritte.' என அழைக்கப்பட்டது. அதன் அர்த்தம் 'எழுத்தறிவிப்பு' என்பதாகும். கெசட் நோட்டீஸ் எனும் சொற்கள் இவ்வாறே வந்தன. முதலாவது அமெரிக்கப் பத்திரிகை Inteiligencer எனும் பெயரில் 1663 ஆம் ஆண்டு லண்டனில் பிரசுரமாகியது. ஆரம்பகாலத்தில் அநேகமான பத்திரிகைகள் தினசரியாக அல்ல வாராந்தரமாகவே வெளியாகின. அக்காலகட்டங்களில் அச்சிடுவதிலும் விநியோகிப்பதிலும் பல சிரமங்களும் காணப்பட்டன. 1690 ஆம் ஆண்டுதான் அமெரிக்காவில் அந்நாட்டுப் பத்திரிகை அச்சிடப்பட்டது. அதுவே பொஸ்டனில் அச்சிடப்பட்ட 'Public k occurrences' எனும் பத்திரிகையாகும். எனினும், காலனித்துவ ஆளுநர் அதை உடனடியாகவே தடை செய்தார்.

பென்ஜமின் பிராங்க்லின் 1729 ஆம் ஆண்டு முதல் சில ஆண்டுகள் வரை தொடராக 'பென்சில்வேனியா கெசடா' எனும் பத்திரிகையை வெளியிட்டார். அந்தவகையில், அமெரிக்கப் புரட்சியின்போது அங்கே 37 பத்திரிகைகள் பிரசுரமாகிக் கொண்டிருந்தன. 1785 ஆம் ஆண்டுதான் இன்றைய பத்திரிகை உலகின் முதல்தரமான The Times எனும் பத்திரிகை லண்டனில் பிரசுரிக்கப்பட்டது. ஆரம்பகட்டத்தில் அது 'Dairy Unik Versal Registetr' எனும் பெயராலேயே அழைக்கப்பட்டது. எனினும், உலகின் முதலாவது செய்திப்பத்திரிகையை 'புகர்ஸ்' எனும் ஜேர்மன் அமைப்பே பிரசுரித்தது.

(ஈ)

## வானிலையை ஆராயும் 'ரோபோ'



ஜப்பானிலுள்ள வானிலை மாற்றங்களை ஆய்வு செய்யும் நிறுவனமொன்று வானிலை மாற்றங்களை ஆராய்வதற்காக புதிய ரொபோ ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கின்றது.

உருண்டை வடிவில் பளிச்சிடும் வண்ணங்களிலான இதன் பெயர் 'போலன் ரொபோ' (Pollen Robot) என்பதாகும். தட்பவெப்பம், ஈரப்பதம், காற்றழுத்தம், சீதோஷ்ணநிலை போன்ற வானிலை மாற்றங்களையும் மலர்களிலுள்ள மகரந்தத்தூளின் தன்மையையும் அறியும்படி இந்த ரொபோ வடிவமைக்கப்பட்டுள்ளது.

வானிலை மாற்றங்களை இணையத்தளம் ஊடாக உடனடியாக அனுப்பி வைக்கக்கூடியதாக இது இருப்பதனால், இயற்கை மாற்றங்களை சமாளிக்கக்கூடியதாக இருக்கின்றது என ஜப்பானிய வானியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## கல் கார்

மேற்கு அல்பேனியாவைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் கல்லினால் ஃபோர்மியுலா பந்தயக்கார் ஒன்றைச் செதுக்கியுள்ளனர். கற்களில் சிற்பங்களைச் செதுக்குவதைத் தொழிலாகக்கொண்ட இந்த சகோதரர்கள், ஆறு தொன் எடையில் மூன்று வகைக்கற்களால் இந்த காரை செதுக்கியுள்ளனர். அல்பேனிய நாட்டின் 'ட்ராஷ்' எனும் சிற்றூரில்



வசிக்கும் இவர்கள் தங்களது மூத்த சகோதரனுக்கு பிறந்தநாள் பரிசாக வழங்கும் நோக்குடனேயே இதனை செதுக்கியுள்ளனர்.

THE GREATEST




மேதைகள் அபூர்வமானவர்கள்.
அரிதாகவே பிறக்கும் அவர்கள் சமுதாயத்தின்
சிந்தனையை மாற்றுகின்றனர். அவர்கள் மறைந்த பின்னரும்
அவர்களது சொற்களும் செயல்களும் வாழ்கின்றன. அத்தகைய
மேதைகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய சஞ்சிகை... The Greatest

The Greatest வாராந்த சஞ்சிகையாக Daily Mirror
பத்திரிகையுடன் இலவசமாக வழங்கப்படுகிறது

வளர்ந்தோர், சிறுவர் அனைவரினதும் அறிவுக்கு விருந்தாகும்
12 இதழ்களாக மே 5 ஆம் திகதி முதல்
வாராந்தம் வெளியாகும்

GREATEST வாசியுங்கள். DailyMirror வாங்குங்கள்.
அருகிலுள்ள Daily Mirror விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்கு முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்.

Physicists | Poets | Philosophers | Chemists | Astronomers | Novelists
Olympians | Explorers | Singers | Leaders | Inventors | Mathematicians

இவர்கள் அனைவரும் தத்தமது துறையில் அபாரமான சாதனை படைத்தவர்கள்.

food city
DailyMirror

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினாத்தாள் I** (கடந்த வார தொடர்ச்சி...)

பெயர் : .................................  நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

★ *தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 15 முதல் 16 வரையிலான வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்து கோடிடுக.*

15.

| கலா ராணியைவிட உயரம் கூடியவள் | கலாவைவிட தேவி உயரம் கூடியவள் | குமாரி ராணியைவிட உயரம் குறைந்தவள் |
| --- | --- | --- |

இதற்கமைய, உயரம் கூடியதிலிருந்து உயரம் குறைந்தவர் வரையிலான ஒழுங்கு முறையே;

(i) கலா, தேவி, குமாரி, ராணி (ii) தேவி, கலா, ராணி, குமாரி
(iii) குமாரி, ராணி, கலா, தேவி

16. பின்வருவனவற்றில் நிறையின் (பாரத்தின்) அடிப்படையில் ஒழுங்கு முறைப்படி பொருட்களைக் காட்டும் விடை யாது?

(i) பஞ்சு, இரும்பு, மணல் (ii) பஞ்சு, மணல், இரும்பு
(iii) மணல், இரும்பு, பஞ்சு

★ *17 முதல் 18 வரையிலான வினாக்களுக்குத் தரப்பட்ட வாக்கியங்களில் சரியான கருத்துள்ள வாக்கியத்தின் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.*

17. (i) வெளிச்சம் வந்ததால் காலை மலர்ந்தது.
(ii) மர அசைவினால் காற்று வீசியது.
(iii) இனிப்பைச் சுவைத்ததால் இனித்தது. (......................)

18. (i) படித்தான் சித்தியடையான். (ii) இலங்கை சிறிய கண்டம்.
(iii) பசித்ததால் குழந்தை அழுகிறது. (........................)

★ *19 முதல் 20 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்ட செயற்பாட்டுக்குப் பொருத்தமற்ற செயலைக் குறிக்கும் விடையின் கீழ்க் கோடிடுக.*

19. தம்பி பட்டம் விட்டான்.

(i) காற்று வீசியதால் மேலே பறந்தது. (ii) அசைந்து, அசைந்து மேலே எழுந்தது.
(iii) இரவில் அழகாக உயரத்தில் பறந்ததைக் கண்டான்.

20. மாடுகள் புல்லை மேய்ந்தன.

(i) பசுமையான புற்றரைகள் காணப்பட்டன.
(ii) குளங்களில் அதிகமான புல் வளர்ந்திருந்தது.
(iii) காலையில் உற்சாகமாக மேய்ந்தன.

★ *தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 21 முதல் 23 வரையிலான வினாக்களுக்கு விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.*

கனத்தோட்டம் உள்ளது. மனத்தோட்டம் உள்ளது. மனத்தோட்டத்திற்கும் கனத்தோட்டத்திற்கும் இடையில் ஞனத்தோட்டம் உள்ளது. ஞனத்தோட்டத்திற்கும் மனத்தோட்டத்திற்கும் இடையில் பூத்தோட்டம் உள்ளது. மனத்தோட்டத்திற்கு அடுத்து பூந்தோட்டம் உள்ளது. கனத்தோட்டத்துக்கு முன் புதுத்தோட்டம் உள்ளது.

21. முதலிலும் கடைசியிலும் உள்ள தோட்டங்கள் முறையே;

(i) கனத்தோட்டம், புதுத்தோட்டம் (ii) புதுத்தோட்டம், பூந்தோட்டம்
(iii) ஞனத்தோட்டம், பூந்தோட்டம்


22. அண்மையில் உள்ள தோட்டங்கள் முறையே;

(i) பூந்தோட்டம், மனத்தோட்டம் (ii) புதுத்தோட்டம், பூந்தோட்டம்
(iii) மனத்தோட்டம், கனத்தோட்டம்


23. நான்காவதாக உள்ள தோட்டத்தின் பெயர்;

(i) ஞனத்தோட்டம் (ii) மனத்தோட்டம் (iii) பூத்தோட்டம்


★ *24 முதல் 25 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சரியான விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.*




24. .................. X ................ = 72 ஐ உருவாக்கத் தேவையான இரு உருக்கள் முறையே;




25. 11×10×10 = .......................... இங்கு விடையாக அமையவேண்டிய உருக்கள்;




★ *25 முதல் 30 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.*

25. 75 பிள்ளைகளுக்கு 25 இனிப்புக்கள் வீதம் வழங்கப்பட்டால், 2 பிள்ளைகளுக்கு கிடைக்கும் இனிப்புக்களின் தொகை யாது?


(i) 50 (ii) 100 (iii) 25

26. 999 என்னும் பெறுமானத்திற்கு 9999 என்னும் பெறுமானத்திற்கும் இடையிலான வித்தியாசத்தில் அடங்கியுள்ள ஆயிரங்கள்;

(i) 8 (ii) 90 (iii) 9




27. நிமால் வடக்குத் திசையில் உள்ளான். அவனுக்கு தெற்குத்திசையில் கமால் உள்ளான். கமாலுக்கு கிழக்குத்திசையில் கதிர் உள்ளான் ஆயின், இவர்கள் இருக்கும் ஒழுங்கைக் குறிக்கும் சரியான வடிவம்;




28. காலை 8.30 மணிக்குப் புறப்பட வேண்டிய புகையிரதம் 2 மணி 45 நிமிடங்கள் தாமதமாகப் புறப்பட்டதாயின், புறப்பட்ட சரியான நேரம் யாது?

(i) 10 மணி 55 நிமிடம் (ii) 11 மணி 15 நிமிடம் (iii) 6 மணி 5 நிமிடம்

29. 115kg அரிசியை 5kg கொண்ட பெக்கட்டுக்களாக அடைக்கவேண்டுமாயின், எத்தனை பெக்கட்டுக்களில் அடைக்கலாம்?

(i) 25 (ii) 23 (iii) 75

30. பால்பெக்கட் ஒன்றின் விலை ரூபாய் 22.50 ஆயின், ரூபாய் 2227.50 இற்கு எத்தனை பால்பெக்கட்டுக்கள் வாங்கலாம்?

(i) 66 (ii) 99 (iii) 88

★ *31 முதல் 33 வரையிலான வினாக்களுக்கு கீழே அடைப்பினுள் தரப்பட்டுள்ள உருக்களின் மூலம் விடையைத் தெரிவு செய்து கோடிடுக.*




31. உரு A இற்குத் தொடர்புடைய உரு;

(i) F
(ii) E
(iii) B


32. C இற்குப் பகையான உரு;

(i) D (ii) E (iii) H

33. செயற்கை, மின், ஒலி என்பனவற்றுடன் தொடர்புடைய உரு;

(i) F (ii) G (iii) D

★ *பின்வரும் பொருட்களின் நீளத்தின் அடிப்படையில் 34, 35 ஆகிய வினாக்களுக்குரிய விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.*





34. A யின் நீளத்திற்கும் C யின் நீளத்திற்கும் இடையிலான வித்தியாசம் யாது? (.................................)

35. B யின் நீளத்திற்கும் C யின் நீளத்திற்கும் இடையிலான வித்தியாசம் யாது?

(.................................)

★ *குண்டூசிகளைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட உரு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 36 ஆம் 37 ஆம் வினாக்களுக்கு விடை தருக.*



36. படத்தில் உள்ள முக்கோணங்களை உருவாக்க எத்தனை குண்டூசிகள் தேவை? (.................................)

37. இங்கு காணப்படும் முக்கோணங்களின் தொகை யாது?

(.................................)

★ *38 முதல் 40 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்ட கட்டத்தினுள் காணப்படும் சொற்களைப் பயன்படுத்தி விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.*

| | | |
| --- | --- | --- |
| குரங்கு | அலை | குடும்பம் |
| கிளி | கிழங்கு | அது |
| அன்பு | | குடும்பம் |
| குவளை | | அறம் |
| அணை | அவை | கிழங்கு |

38. இங்கு காணப்படும் ஒருமை, பன்மைச் சோடியை எழுதுக? (.................................)

39. அதிக தடவைகள் வந்துள்ள சொல்லின் முதல் எழுத்தை எழுதுக. (.................................)

40. தமிழில் மொழியின் ஆரம்ப எழுத்தில் ஆரம்பிக்கும் இரண்டு எழுத்துக்கு மேற்பட்ட இரு சொற்களை எழுதுக.

(.................................)

வினாத்தாள் I இன் விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றும் ஆவி; இது கொட்டாவி





**சோம்பல், களைப்பு, உற்சாகமின்மை ஆகியவற்றின்போது மூளையின் கட்டளையின்றி ஏற்படும் கட்டுப்படுத்த முடியாத ஒரு செயல்தான் கொட்டாவியாகும். கொட்டாவி எப்போதும் தனியே வருவதில்லை. ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு மூன்று முறை வரும். ஒருவருக்குக் கொட்டாவி வந்தால், அருகிலுள்ளவருக்கும் கொட்டாவி வருவதை நாம் அவதானிக்கின்றோம்.**







## கொட்டாவி என்பது...

கொட்டாவி என்பது 'வாயைப் பிளந்து மூச்சுக் காற்றை ஆழமாக உள்ளே இழுத்து, பின்னர் உள்ளே சென்ற காற்றைப் பட்டென்று வெளியே தள்ளுதல்' என்பதாக அகராதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

சோம்பலும் கொட்டாவியும் நெருங்கிய நண்பர்கள். அவை இரண்டும் இணைந்தே இருக்கின்றன. கொட்டாவி விடுகின்றபோது சோம்பல் முறித்தல் ஏற்படுகின்றது. அநேகமாகக் குழந்தைகளிடத்தில் இவையிரண்டும் இணைந்து காணப்படும்.

''ஆரம்பப் பாடசாலையில் கற்றுக் கொண்டிருந்தவேளையில், சுகாதார பாடஆசிரியர் வகுப்பிற்கு வருகின்றார் என்றால் எமக்கெல்லாம் ஒரே பயமாக இருக்கும். வகுப்பில் கொட்டாவி விடும் மாணவர்களை அந்த ஆசிரியருக்குப் பிடிக்காது. அப்படியே கொட்டாவி விட்டாலோ, அந்த மாணவனை எழுந்திருக்கச் செய்து, பாடசாலைக் கட்டடத்தைச் சுற்றி மூன்று முறை ஓட வைத்துவிடுவார். இதனால், அவரின் பாடவேளையில் கொட்டாவி வந்து விடக்கூடாது என்பதில் நாங்களெல்லாம் மிகவும் எச்சரிக்கையாயிருப்போம். ஆசிரியரின் கருத்தின்படி, கொட்டாவி விடும் மாணவன் பாடத்தை உரிய முறையில் கவனம் செலுத்த இயலாதவன். எனவே, அவனை சுறுசுறுப்பாக்குவதற்காகவே அவ்வாறு ஓடச் செய்வார்'' என ஒருவர் கொட்டாவி பற்றித் தனது அனுபவத்தை மேற்கண்டவாறு பகிர்ந்துகொண்டார்.

## ஏற்படுவதன் காரணம்

உடல் இயக்கங்களுக்கு மூளையே மூல காரணமாக இருக்கின்றது. மூளையின் இயக்கத்திற்கு அதிக குருதி தேவைப்படுகிறது. இதற்கு கொட்டாவி பெரிதும் துணைபுரிகின்றது. கொட்டாவி விடுவதன் மூலம் குருதியானது இருதயத்தை நோக்கி விரைந்து செல்லும் என்பதோடு, மூளைக்குச் செல்லும் குருதியின் அளவும் அதிகமாகிறது. இதனை அடுத்து மூளையின் தடுமாற்ற நிலை சமநிலை அடைந்து, ஒட்சிசன் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. அத்துடன், கொட்டாவி விடுவதனூடாக மூளையின் வெப்ப நிலையும் கட்டுப்படுத்தப்படுகின்றது.

தீராத பசி, அளவுக்கு மிஞ்சிய உணவுகளை உட்கொள்ளல், அசதி, தூக்கக் கலக்கம், தன்னைச் சுற்றி நடப்பவைகளைக் கவனிப்பதில் விருப்பமின்மை, சுவையற்ற உரையாடல், பொறுமையைச் சோதிக்கும் சொற்பொழிவு என்பன பொதுவாகக் கொட்டாவியை வரவழைக்கக் கூடியவை. இவ்வகைக் கொட்டாவியைச் 'சோம்பல் கொட்டாவி' என்று அழைக்கலாம். தவிர; வயிற்றுக் கோளாறுகள், குடல்நோய்கள், மூளைக்கட்டி, காக்காய் வலிப்பு, இரத்தக்குழாய் சிதைவு, ஹிஸ்டீரியா போன்ற நோய்களின் காரணமாகவும் கொட்டாவி வரலாம். அடிக்கடி கொட்டாவி விடுகின்ற பழக்கமுள்ளவர்கள், தம்மை ஒரு வைத்தியரிடம் காட்டிப் பரிசோதனை செய்துகொள்வது நல்லதாகும்.

கொட்டாவி உடலில் நடக்கும் ரசாயன மாறுதல்களைச் சிறிது முடுக்கிவிடுவதோடு, தசைகளையும் முறுக்கேற்றி விடுகின்றது. கொட்டாவி விடுகின்றபோது ஒருவித மகிழ்ச்சியும் விட்டபின் மனநிறைவும் ஏற்படுவதை நாம் உணரலாம். தூங்கி விழித்தவுடன் பிள்ளைகளானாலும் பெரியவர்களானாலும் கொட்டாவி ஒன்றை விட்டுச் சோம்பல் முறித்தால், அவர்கள் முன்னைய இரவு நிம்மதியாகத் தூங்கி ஓய்வெடுத்துள்ளதாகக் கொள்ளலாம். எனினும், இவ்வகையான கொட்டாவிகளும் அசதி, தூக்கக் கலக்கம், சுற்றி நடப்பவைகளில் ஈடுபாடின்மை போன்றவற்றின்போது ஏற்படும் கொட்டாவிகளும் வித்தியாசப்படுகின்றன.

## நாகரிகமாக கொட்டாவி விடுதல்

பொதுமக்கள் கூடுகின்ற வைபவங்களில் ஏனையோர் முன்னிலையில் கொட்டாவி விடுவதானது அநாகரிகமாகக் கொள்ளப்படுகின்றது. இவ்வேளைகளில் கொட்டாவி விடுவதற்கு நேர்ந்தால், ''ஆ''வென்று வாயைப் பிளந்து ஏனையோர் முகத்திற்கு முன்னால் விடாமல் சிறிது ஒதுங்கி முடிந்தால் கைக்குட்டையால் மறைத்துக்கொண்டு, நாகரிகமாகக் கொட்டாவி விடும் பழக்கத்தை ஒவ்வொருவரும் கடைப்பிடிக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

நாம் விரும்பியோ, விரும்பாமலோ இயற்கையாக வந்துவிடுகின்ற கொட்டாவியைக் கட்டுப்படுத்துவது இயலாத விடயம்தான். இருப்பினும், வாழ்க்கையில் நாம் கைக்கொள்கின்ற சில பழக்கவழக்கங்களின் மூலமாகச் சோம்பல் கொட்டாவியைத் தவிர்த்துக்கொள்ள முடியும். அளவோடு உணவு உட்கொண்டு, நன்றாகத் தேகாப்பியாசம் செய்து, நிம்மதியாகத் தூங்கி ஓய்வைப் பெற்றுக்கொள்வதோடு, எப்பொழுதும் எமது உடலை சுறுசுறுப்பாக வைத்துக்கொள்வதன் மூலம் இந்த நிலையைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

**-செம்மைத்துளியான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனகொண்டா பாம்புடன் சிலர்


# பா...பா...

'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்பது பழமொழி. பாம்பு, ஊர்வன வகையைச் சேர்ந்த ஒரு விலங்கினமாகும். உலகில் பொதுவாக அனைத்து நாடுகளிலும் பாம்புகள் இருக்கின்றன. எனினும், அண்மையில் உலகளவில் மேற்கொள்ளப்பட்ட பாம்புக்கடி பற்றிய புள்ளிவிபரங்கள் தெற்காசிய நாட்டினரைப் பீதிக்குள்ளாக்கியிருக்கின்றது. அதாவது, ஆண்டுதோறும் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலேயே பாம்பு தீண்டி மரணத்தை எதிர்கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருகிறது என்பதுதான் அதற்குரிய காரணமாகும்.











## வகைகள்

உலகில் சுமார் 3 ஆயிரம் வகையான பாம்புகள் உள்ளன. இவற்றில் 2700 வகையான பாம்புகள் நிலத்திலும் 55 வகையான பாம்புகள் நீரிலும் வாழ்வதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. நீரில் வாழும் பாம்பு வகைகளே பெரும்பாலும் அதிக விஷமுள்ளவை. நிலத்தில் வாழும் பாம்புகளில் 680-700 வகையான பாம்புகளுக்கு அதிக விஷமுண்டு.

அத்துடன், நீர்ப் பாம்பு வகைகளின் அதிகபட்ச நீளம் 2.75 மீற்றராக இருக்கும். நிலத்தில் வாழும் பாம்புகளின் அதிகபட்ச நீளம் 10.7 மீற்றராக இருக்கும். மலைப் பாம்புகள் சராசரியாக 10.7 மீற்றர் நீளமும் 230 கிலோ எடையும் கொண்டவையாகக் காணப்படும். எல்லாவற்றிலும் கொடிய விஷம் உடையது ராஜநாகம். இவ்வகையான அதிக விஷமுள்ள பாம்புகள் அவுஸ்திரேலியாக் கண்டத்திலேயே வாழ்கின்றன. அத்துடன், 'அமேசன்' காட்டுப்பகுதிகளிலும் அறியப்படாத மிக நீண்ட பாம்பு வகைகள் வாழ்வதாக உயிரியலாளர்கள் கூறுகின்றனர்.

## நச்சுப்பாம்புகள்

- நாகபாம்பு (நல்ல பாம்பு)
- கட்டுவிரியன்
- கண்ணாடி விரியன்
- சுருட்டைப் பாம்பு
- பவளப்பாம்பு
- வாளைக்கடியன்
- கடற்பாம்புகள்
- விரைந்தோடும் ஆபிரிக்க கரும் மாம்பா (உலகிலேயே மிக வேகமாக ஊரவல்ல பாம்பு)
- மலைப்பாம்பு (வெண்ணாந்தை, போவா)

## நச்சற்ற பாம்புகள்

- சாரைப்பாம்பு
- பச்சைப் பாம்பு
- கொம்பேறி மூக்கன்
- வட அமெரிக்கா கார்ட்டர் பாம்பு
- அனகொண்டா

## உணவுப் பழக்கம்

பாம்புகள் ஊனுண்ணி வகைக்குரியவை. இவை சிறு விலங்குகளையும் உணவாகக் கொள்கின்றன. அத்துடன்; சிறிய ஊர்வன, எலி, பறவைகள் மற்றும் அவற்றின் முட்டைகள், பூச்சிகள் என்பனவற்றையும் உணவாகக் கொள்கின்றன. சில பாம்புகள் நச்சுக்கடியின் மூலம் இரையைக் கொல்கின்றன. இன்னும் சில பாம்புகள் இரையை சுற்றி வளைத்து நெருக்கிக் கொல்கின்றன. சில இரையை உயிருடன் முழுதாக விழுங்கியும் விடுகின்றன. அத்துடன், பொதுவாக பாம்புகள் யாரையும் தீண்டுவதில்லை. தற்காப்புக் காகவே அவை தீண்டுகின்றன. எனவே, பாம்புகள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளில், இரவு நேரத்தில் நடமாடும் போது முழங்கால் வரை உள்ள பிரத்தியேக

'உலக மக்களில் சராசரியா
ஆண்டுதோறும் கொடி
கடிக்கு ஆளாகின்றனர்.
ஆயிரம் பேர் வரை

காலணிகளை அணிவது நல்லது. பாம்பின் விஷத்தில் இருந்து பல நோய்களுக்கான மருந்துகளும் தயாரிக்கப்படுகின்றன.


## இனப்பெருக்கம்

பாம்புகள் பெரும்பாலும் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்கின்றன. ஆனால், சில பாம்புகள் குட்டி போடுகின்றன. உ+ம்: விரியன், பச்சைப்பாம்பு என்பன இவ்வகையில் அடங்கும். அத்துடன், மண்பாம்பின் கருமுட்டை வயிற்றில் வளர்ந்து, குட்டியாகப் பிறக்கிறது. பாம்புகள் முட்டைகளுக்கு அதிக பாதுகாப்பு வழங்குவதில்லை. சில பாம்புகள் மட்டுமே முட்டைகளை அடைகாக்கின்றன.

## பாம்புக்கடி

உலக மக்களில் சராசரியாக 30 லட்சம் பேர் வரை ஆண்டுதோறும் கொடிய விஷப்பாம்புகளின் கடிக்கு ஆளாகின்றனர். இதில் 1 லட்சத்து 25 ஆயிரம் பேர் வரை இறக்கின்றனர். அமெரிக்காவில் ஆண்டு தோறும் 8 ஆயிரம் பேர் வரையில் பாம்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ... பாம்பு!!

கடியால் இறக்கின்றனர். ஐரோப்பாவில் பாம்புக்கடிக்கு சுமார் 5 ஆயிரம் பேர் வரை இறப்பதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

பாம்புக்கடியால் தெற்காசியாவிலேயே அதிக உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இந்தியாவில் ஆண்டுக்குச் சராசரியாக 80 ஆயிரம் பேர் வரை பாம்புக்கடிக்கு ஆளாகின்றனர். இவர்களில் 11 ஆயிரம் பேர் வரை மரணமடைகின்றனர். அடுத்த இடத்தை வகிப்பது இலங்கை. இங்கு பாம்புக்கடிக்கு ஆளாகும் 33 ஆயிரம் பேரில் 7 ஆயிரம் பேர் வரை ஆண்டு தோறும் மடிகின்றனர். மூன்றாவது இடத்தைப் பிடிக்கும் நாடு பங்களாதேஷ்.

**...ரியாக 30 லட்சம் பேர் வரை ...ாடிய விஷப்பாம்புகளின் ...னர். இதில் 1 லட்சத்து 25 ...வரை இறக்கின்றனர்'**

இங்கு ஆண்டுக்கு 6500 பேர் வரை மடிகின்றனர். இந்நாட்டில் 1 லட்சம் பேரில் 623 பேரைப் பாம்புகள் கடிக்கின்றன.

## பாம்பு கடித்தவுடன் என்ன செய்யலாம்?

பாம்பு கடித்து உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை தெற்காசியாவில் அதிகரிப்பதன் காரணம், பாம்புக்கடி குறித்து போதியளவு விழிப்புணர்வு இல்லாமையேயாகும். இங்கு பாம்புக்கடிக்கு உள்ளானவர்களில் 86% ஆனோர் உடனடியாக மருத்துவமனை செல்வதில்லை.

மந்திரித்து விடுதல், வழிபாட்டுத் தலங்களில் படுக்க வைத்துப் பிரார்த்திப்பது, இலைகளை அரைத்துப் பத்துப் போடுவது போன்றவை பாம்புக்கடிக்கு தீர்வு தந்துவிடும் என்று இவர்கள் நம்புகின்றனர்.

## முதலுதவி

1. குழாய் நீரை வேகமாகத் திறந்து கடிபட்ட இடத்தில் பிடித்தல்.

2. கடித்த இடத்தை சவர்க்காரம் இட்டு 3 முறை கழுவுதல்.

3. பொதுவாக பாம்புக்கடிக்கு ஆளானவர் பதற்றத்துடன் காணப்படுவார். இதனால், இதயத்துடிப்பு அதிகரிக்கும். இதயத்துடிப்பு அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ளல்.

4. பாம்பு தீண்டியவரைச் சுற்றிக் கூட்டமாக நிற்பதைத் தவிர்த்து, அவரை காற்றோட்டம் உள்ள இடத்தில் வைத்திருத்தல்.

5. நச்சு எதிர்ப்பு மாத்திரைகள் எல்லா அரச மருத்துவமனைகளிலும் உள்ளன. எனவே, பாம்புக்கடிக்கு ஆளானவரை விரைவில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லல்.

6. பாம்பு கடித்தவரை நடக்க வைக்காதிருத்தல். அவ்வாறு செய்தால் குருதி ஓட்டம் அதிகரித்து நரம்பு மண்டலம் பாதிக்கப்படும்.

7. பாம்பு கடித்த நேரம், பாம்பின் விபரங்கள் என்பன தெரிந்திருந்தால் மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும். இது சிகிச்சையை உரிய முறையில் நடத்த உதவும்.


## செய்யக்கூடாதவை

✱ பாம்பு கடித்த இடத்தில் கட்டுப்போடக்கூடாது. இவ்வாறு செய்தால் விஷம் ஓரிடத்திலேயே தங்கி பாதிப்பை ஏற்படுத்தும்.

✱ கடிபட்ட இடத்தில் வாயை வைத்து உறிஞ்சக்கூடாது. உறிஞ்சுபவரின் வாயில் அல்லது நாக்கில் புண் இருந்தால், அந்த விஷம் அவரையும் தாக்கும்.

✱ கடிபட்ட இடத்தை கூரிய ஆயுதங்களால் கிழிக்கக்கூடாது. இது கடி தடத்தை இல்லாமல் செய்துவிடுவதோடு, இது மருத்துவ சிகிச்சை அளிப்பதில் பாரிய சிக்கலையும் ஏற்படுத்திவிடும்.

✱ மருத்துவர் அனுமதியின்றி எந்த மருந்து மாத்திரைகளையும் பாம்புக்கடிக்கு உட்பட்டவருக்குக் கொடுக்கக்கூடாது.



கருநாகம்



மாட்டுக்கன்று ஒன்றை இரையாகக் கொள்ளும் மலைப்பாம்பு





நீர்ப்பாம்பு

## உங்களுக்குத் தெரியுமா?

★ அண்டார்டிக்கா கண்டத்தில் குளிர் அதிகமாக இருக்கும் என்பதால், இங்கு பாம்புகள் உயிர் வாழ்வதே இல்லை. பாம்பின் ரத்தம் உறைந்துபோய்விடுவதே அதற்குரிய காரணமாகும்.

★ உலகிலேயே மிகப்பெரிய பாம்பு இனம் 'அமேசன்' காடுகளில் வாழும் பச்சை நிற அனகொண்டாவாகும். இதன் ஒன்றின் நீளம் சுமார் 10.7 மீற்றர்.

★ மிகவும் சிறிய பாம்பு அண்மையில் கரீபியன் தீவுகளில் கண்டுபிடிக்கப்பட்டது. மண்புழு அளவில் 10 செ.மீ நீளத்தில் இது காணப்படுகின்றது.

★ உலகத்திலேயே மிகக்கொடிய உயிரியல் ஆயுதம் (bio weapon) பாம்புகளின் விஷப்பற்கள்தானாம்.

★ பாம்புகள் உணவே இல்லாமல் பல மாதங்கள் வரை வாழவும் வளரவும் செய்யுமாம்.

★ நல்ல பாம்பு கண்ணைத்தான் குறி வைக்கும்.

★ மலைப்பாம்புகள் மாதக்கணக்கில் சாப்பிடாமலேயே இருக்கும். அதேநேரம், சாப்பிடும்போது ஒரு சிறு துண்டைக்கூட மீதம் வைக்காமல் சாப்பிட்டுவிடும்.

★ பாம்புகளுக்கு எலும்பைக்கூட செரிக்க வைக்கின்ற அளவுக்கு சிறப்பான உடலமைப்பு உண்டு.

★ ஒருவகை பாம்பு 50 அடி தூரம் வரை பறக்குமாம். அவ்வாறு பறக்கும்போது 'S' வடிவத்தில் உடலை வளைத்துப் பறக்குமாம்.

★ ஒரு பாம்பு அதைவிட நீளமான இன்னொரு பாம்பையும் சாப்பிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருமை, வெண்மை எவை?

கோசல நாட்டு மன்னனுக்கு சிலவேளைகளில் ஐயங்கள் எழுவதுண்டு. மன்னன் தன் ஐயங்களை அமைச்சர்களிடம் கேட்டுத் திருப்தி அடைந்து கொள்வான். இவ்வாறே ஒருநாள் அவனுக்கு ஓர் ஐயம் எழுந்தது. அந்த ஐயத்தைத் தீர்ப்பதற்காக அந்திநேரம் அமைச்சரை அழைத்து 'நாளை காலை அரச சபையைக் கூட்டுங்கள்'' என்று உத்தரவிட்டான். காலை அரச சபை கூடியது. அரச சபையில் மன்னன் தன் ஐயத்தைக் கூறினான். மன்னனின் ஐயமாவது ''உலகிலேயே மிகவும் வெண்மையானது எது? உலகிலேயே மிகவும் கருமையானது எது?'' என்பதாகும். அதற்கு ஒரு சிலர் 'பஞ்சு' என்றனர். இன்னும் சிலர் 'பால்' என்றனர். இவ் விடைகளினால் மன்னன் திருப்தி அடையவில்லை. மன்னன் தனது அடுத்த இரண்டாவது கேள்வியைக் கேட்டான். அதற்கு ஒரு சிலர் 'காகம்' என்றனர். இன்னும் சிலர் 'கண்மை' என்றனர். இப்பதில்களும் மன்னனுக்குத் திருப்தியைத் தரவில்லை. இவர்களின் பதில்கள் அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த ஒரு விவசாயிக்கு சிரிப்பு வந்துவிட்டது. அவனால் சிரிப்பை அடக்கமுடியவில்லை. விவசாயி அரசசபை என்றும் பார்க்காமல் சிரித்துவிட்டான். இதைக்கண்ட மன்னன் கடும் கோபங்கொண்டு விவசாயியிடம் ''ஏன் சிரிக்கிறாய்'' என்று கேட்டான். அந்த விவசாயி மன்னனிடம் ''மன்னரே! நீங்கள் கேட்ட



கேள்விகளுக்கு எனக்கு விடை தெரியும்'' என்றான். அதற்கு மன்னன் ''உனக்கு விடை தெரியுமா? கூறு பார்க்கலாம்'' என்றான். விவசாயி, ''மன்னர் பெருமானே! உலகிலேயே வெண்மையானது பகல். உலகிலேயே கருமையானது இரவு'' என்றான். இதைக் கேட்ட மன்னன் ''நீ கூறுவதை நான் நம்பமாட்டேன். நீ எனக்கு அதை நிரூபித்துக் காட்டு'' என்றான். விவசாயி மன்னரிடம் ''நான் அரண்மனையிலிருந்து இதை நிரூபித்துக் காட்டுவேன். எனக்கு இரண்டு நாட்கள் அவகாசம் தரவேண்டும். நான் இங்கு என்ன செய்தாலும் யாரும் எதுவும் கூறக்கூடாது'' என்றான். இதற்கு மன்னன் அனுமதி அளித்தான். அன்று பகல்வேளை மன்னன் அந்தப்புரத்திற்குச் சென்று உறங்கினான். விவசாயி ஒரு சிறு பிள்ளையை மன்னன் படுத்திருந்த அறையின் ஜன்னல் பக்கத்தில் விட்டான். பின்பு ஒரு கிண்ணம் பாலை எடுத்து அறை வாசலில் வைத்துவிட்டான். பின் குழந்தையைக் கிள்ளிவிட்டான். குழந்தை வீறிட்டுக் கத்தியது. குழந்தையின் அழுகை கேட்டு மன்னன் விழித்து வெளியில் வரும்போது பால் கிண்ணம் தட்டுப்பட்டு பால் கீழே சிந்திவிட்டது. ''யார் பாலை இங்கே வைத்தது'' எனக் கேட்டான் மன்னன். அதற்கு விவசாயி ''நான்தான் மன்னரே'' என்றான். ''நீயா? ஏன் வாசலில் பாலை வைத்தாய்?'' எனக் கேட்க விவசாயி. ''மன்னரே! உலகில் வெண்மையானது பகல். ஏனென்றால், பகலின் வெண்மைக்கு பால் உங்கள் கண்ணில் படவில்லை'' என்றான். அதற்கு மன்னன், ''சரி உலகிலேயே வெண்மையானது பகல் என ஒப்புக்கொள்கிறேன்'' என்றார். அப்போது விவசாயி ''மன்னரே! இரவுதான் கருமையானது. ஏனென்றால், பகலில் தெரியாத விண்மீன்கள். இரவின் கருமைக்குத் தெரிகின்றன'' என்றான். அதற்கு மன்னன் ''சரி உலகிலேயே மிகவும் கருமையானது இரவு என நான் நம்புகின்றேன்'' எனக் கூறி, விவசாயிக்கு உயரிய பரிசுப் பொருட்கள் வழங்கினான்.

தொகுப்பு : சா.ஆண்டிலக்ஷ்மி,

# அன்பின் மகத்துவம்

'அன்பு', தமிழில் காணப்படும் அழகிய மூன்றெழுத்துச் சொல். அன்புக்கு மூவுலகையும் ஈர்க்கும் சக்தி உண்டு. அன்பால்தான் இந்தப் பூமி சுழல்கிறது என்றால் அது மிகையில்லை. அந்தளவுக்கு ஆற்றல் படைத்தது அன்பு.

அனைத்து மதங்களும் அன்பைப் பற்றி அழகாக வலியுறுத்துகின்றன. பௌத்த, கத்தோலிக்க, இந்து, இஸ்லாம் மதங்களின் புனித நூல்கள் அனைத்துமே அன்பை அடிப்படையாகக் கொண்டு அருளப்பட்டவையே. அவ்வளவு முக்கியத்துவம் அன்பிற்கு உண்டு.

ஆனால், இன்று இந்த அன்பானது ஒவ்வொருவரிடமும் இருக்கிறதா? என்று நம்மை நாமே கேட்டுக்



கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 'பாவத்தின் சம்பளம் மரணம்' என்று பைபிள் கூறுகின்றது. இதை அறிந்திருந்தும் நாம் பாவம் செய்கின்றோம் என்றால் நம்மைப் பற்றி நமக்கு அக்கறையில்லை என்றுதானே அர்த்தம்? உன்னையே நீ நேசிக்காதபோது பிறரை எவ்வாறு நீ நேசிப்பாய்? எனவே, முதலில் நாம் நம்மீது அன்பு காட்டவேண்டும். அத்தோடு, பிறர் மீதும் அன்பு காட்டவேண்டும்.

இறைவன் எம்மீது குறைவின்றிப் பொழியும் அன்பை நாம் மாசுபடுத்தாமல் அதனைப் பிறர் மீது காட்டவேண்டும். எவ்வித எதிர்பார்ப்புகளும் இல்லாத அந்த தூய அன்பை பிரதிபலன் பார்க்காமல் செலுத்தவேண்டும். அன்புள்ள மனிதனில் கோபம், பொறாமை, பகை, எரிச்சல், வெறுப்பு என எதுவுமே இருக்காது. மாசில்லாத களங்கமில்லாத தூய அன்பு வலிமை பெற்றதாக, உண்மையுடையதாக நின்று நிலைபெறும்.

நம்மிடம் அன்பு இருந்தால், நாம் பிறர்மீது அன்புள்ளவர்களாக இருந்தால் பூமியில் பாவங்கள் இல்லாது ஒழிந்து விடும். உலகம் சமாதானத்தோடு சந்தோஷமாகச் சுழலும். எனவே, நாம் அன்பு என்ற உறுதியான அத்திவாரத்தால் எமது வாழ்க்கையை அழகாக அமைத்துக்கொண்டு வாழப் பழகிக் கொள்ளவேண்டும். அன்பினால் தீயவனையும் நல்லவனாக மாற்றமுடியும்.

**ஜே.எண்டன் ஜோர்ஜ்,**
**கலைப்பிரிவு (உயர்தரம்),**
**சென்.மேரிஸ் மத்திய கல்.,**
**பொகவந்தலாவ.**

# வறுமையின் கொடுமை



வறுமையின் கொடுமையை நாம் அனைவரும் அறிந்திருக்கவேண்டும். நமது நாட்டில் வறுமை காரணமாக நிகழ்ந்த கொடுமையான சம்பவங்களினால் வறுமையின் கொடுமையை அனைவரும் அறியவேண்டிய அவசிய நிலைமை எழுகின்றது.

எந்த ஒரு பிள்ளைக்கும் ஆதரவு கிடைக்கும் இடம் தாய்மடி. தமக்குப் பாதுகாப்புக் கொடுப்பவர் தாய் என்று தமது கள்ளம் கபடமற்ற உள்ளங்களினால் பிள்ளைகள் எண்ணிக்கொண்டிருக்கின்றன. ஆகவே, ஒரு குழந்தைக்கு அன்பு, ஆதரவு, பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது ஒரு தாய்தான். ஆனால், பெற்றெடுத்த குழந்தையை நதியில் வீசி எறிந்த கொடுமையான சில நிகழ்வுகளும் நடந்துதான் இருக்கின்றன. அக்குழந்தை நினைத்திருக்குமா தனக்கு எமன் தனது தாயென்று? இதற்கு காரணம் என்ன? நமது நாட்டில் வேரோடி வரும் வறுமையே இந்நிலைக்கு முக்கிய காரணமாகும். இந்த வறுமை எனும் உயிர்க்கொல்லியை அழித்தொழிக்க நமது நாட்டு மக்களின் கரங்கள் ஒன்றுபட வேண்டும். அந்தக் குழந்தையின் உளக்குமுறல் இப்படி இருந்திருக்குமா?

தாய் மனமே உன்னிடம்
வினவுகின்றேன்.
என்னைப் பெற்றெடுத்தாயா
உன் வயிற்றில்?
நான் செய்த பாவம்தான் என்ன
உன் வயிற்றில் பிறந்ததா
தாயே நீ என் எதிரியென்று
அறிந்திருந்தால்,
அழிந்திருப்பேனே உன்
கருவறையில்..!

**எ.எஸ்.எஸ்.நஸீலா,**
**போகஹகும்புர மு.வித்.,**
**வெலிமடை.**




# விடுகதைகள்

1. முத்துக்கோட்டையில் மகாராணி சிறைப்பட்டிருக்கிறாள். அவள் யார்?
2. பிறக்கும்போது வால் உண்டு; இறக்கும்போது வால் இல்லை. அது என்ன?
3. வெளுத்த ஆளுக்கு கறுப்புத் தலைப்பாகை. அது என்ன?
4. தரையில் இருப்பான். தண்ணீரில் மிதப்பான். அது என்ன?
5. காலையில் வந்த விருந்தாளியை மாலையில் காணவில்லை. அது என்ன?
6. இருந்த இடத்தில் நகர்ந்தபடி இரவும் பகலும் செல்வான். அவன் யார்?
7. தாயின் வாயில் பிறக்கும்; தரணி எங்கும் சிறக்கும். அது என்ன?
8. தண்ணீர் இல்லாத காட்டில் தாகம் எடுத்தாலும் தயங்காமல் போகும். அது என்ன?
9. பார்த்தால் பசப்புக்காரி. கடித்தால் கசப்புக்காரி. அவள் யார்?

**விடைகள்**

| | | |
|---|---|---|
| 1. நாக்கு | 4. படகு | 7. தாலாட்டு |
| 2. தவளை | 5. சூரியன் | 8. ஒட்டகம் |
| 3. தீக்குச்சி | 6. கடிகாரம் | 9. பாகற்காய் |



# அணிலே.... அணிலே....

சுட்டிக், சுட்டி அணிலே...
கோலமான அணிலே!
எட்டி, எட்டிப் பார்க்கும்
எழிலான அணிலே!

பஞ்சு போன்ற அணிலே....
பழங்கள் தின்னும் அணிலே!
நெஞ்சை நிமிர்த்திப் பார்க்கும்
நேர்த்தியான அணிலே!

முதுகில் மூன்று கோடு
போட்டு விட்டது யாரு?
பதில் சொல்லு அணிலே
பாசமான அணிலே!

உன்னைப் போல நானும்
ஓடி ஆட ஆசை!
திண்ணை மேலே ஏறி
திரிவதற்கும் ஆசை!
சோம்பலில்லா அணிலே
சுறுசுறுப்பு அணிலே!
நாங்கள் கூட உன் போல்
வேலை செய்வோம் அணிலே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 3577

சமீம் அஸ்னப்,
தரம் - 1,
ஓட்டமாவடி தே.பாட.,
ஓட்டமாவடி



அங்.இல: 3578

இ.விவேதனன்,
தரம் - 6B,
ஹாட்லிக் கல்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல: 3579

த.தேனுகா,
தரம் - 8D,
சாவகச்சேரி இ.கல்.,
சாவகச்சேரி.



அங்.இல: 3580

ந.திலக்ஷன்,
தரம் - 11,
யாழ்.மத்திய கல்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல: 3581

கோ.லக்சனா,
தரம் - 8,
கோபாலபுரம் த.வித்.,
திருகோணமலை.



அங்.இல: 3582

எச்.ரிகாசா,
தரம் - 8B,
பிஷப்ஸ் கல்.,
கொழும்பு.



அங்.இல: 3583

எம்.உமர்,
தரம் - 2A,
அல்-பஹ்றியா ம.கல்.,
பாணந்துறை.



அங்.இல: 3584

பிரைட் வின்சன்,
தரம் - 8,
நிவ்வெளி த.வித்.,
நோர்வூட்.



அங்.இல: 3585

எஃப்.அப்றா,
தரம் - 6,
ஆயிஷா ம.ம.வித்.,
வாழைச்சேனை.



அங்.இல: 3586

மு.ஷவ்கி,
தரம் - 8A,
அன்னசர் வித்.,
மட்டக்களப்பு.



அங்.இல: 3587

அன்டனி திலக்ஷன்,
தரம் - 9C,
சென்.ஹென்றிஸ் கல்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல: 3588

இரா.சிவராஜ்,
தரம் - 11B,
யா/கோ.கிறிஸ்தவக் கல்.,
கோப்பாய்.

# உலகின் மிக நீண்ட மகா காவியம்

திபெத் மக்களின் புகழ்பூத்த கதையை உள்ளடக்கிய மகா காவியமான 'கேஸா'வே உலகின் மிக நீண்ட காவியமாகும். இது கேஸர் மன்னனின் வீரதீரச் செயல்கள், அவன் எதிரிகளின் சிம்மசொப்பனமாக விளங்கியவிதம் என்பன குறித்து விவரிக்கின்றது. பத்து லட்சத்திற்கும் அதிகமான வரிகளைக் கொண்ட இக்காவியம் திபெத்தியரான சிவுவான் கன்சுயுனான் மற்றும் உள்நாட்டு மொங்கோலிய பிரதேசத்தில் கையால் எழுதப்பட்ட ஆவணங்களாகவும் வாய்மொழிக் கதைகளாகவும் கடந்த ஆயிரம் வருடங்களாக இருந்து வருகின்றது.



சுவர் ஓவியத்தில் கேஸர் மன்னன்

இக்காவியம் 30 அத்தியாயங்களைக் கொண்டது. இது மாபெரும் காவியமாக மட்டுமல்லாது வரலாற்று ஆவணமாகவும் மனித விஞ்ஞானத்தின் அறிவியல் களஞ்சியமாகவும் இருக்கின்றது. அத்துடன், அது புராதன திபெத் இன மக்கள் பற்றியும் அவர்களின் சமூக வாழ்வின் உன்னத ஆதாரமாகவும் ஆவணமாகவும் திகழ்கின்றது.

லிங்க்டீவா கோத்திரத்தைச் சேர்ந்த தலைவரொருவர் 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகவும் அவரைப் பற்றிய பல விடயங்களையும் இது குறிப்பிடுகின்றது. இந்த கோத்திரத்தார் குவாங்கோ நதியின் ஆற்றுவாய் பகுதியான கின்ஷாப் மற்றும் யாலோங் நதிப் பகுதியில் வாழ்ந்தனர். இவர்கள் தமது கோத்திரத்தாரின் நிகரற்ற அன்பையும் கௌரவத்தையும் புகழையும் ஒருங்கே கொண்டிருந்ததாக வாய்மொழிக்கதைகளாக வழங்கப்பட்டு மீண்டும் மீண்டும் கூறப்பட்டு வந்தமையால் இந்த மகா காவியம் ஒரே நேரத்தில் எழுதப்பட்டதல்ல. நீண்ட காலமாக தொடர்ந்து எழுதப்பட்டு வந்துள்ளது.

காலம் செல்லச் செல்ல கேஸா காவியம் திபெத்திலிருந்து மொங்கோலியாவிற்கும் மத்திய ஆசியாவிற்கும் துருக்கி மற்றும் சிக்கிம் நாடுகளுக்கும் பின்னர் பூட்டானுக்கும் பரவியது. இந்த காவியம் ஆங்கிலம், பிரெஞ்ச், ஜேர்மன், ரஷ்ய, மொங்கோலிய இனமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதோடு, இந்தியாவிலும் பல இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

(அ)


## துஷாரா கலைவட்டம் - 2010

## எக்ரோன் அகில இலங்கை சித்திரப் போட்டி

**(இலங்கையில் 15 பிரிவுகளின் கீழ் நடத்தப்படுகின்ற ஒரேயொரு மிகப்பிரமாண்டமான சித்திரப்போட்டி)**

எக்ரோன் நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடனும் விஜய், விஜய, பிவித்து பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடனும் துஷாரா கலைவட்டத்தினால் அகில இலங்கை ரீதியில் சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களுடன் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்படும். மேற்படி போட்டி தொடர்பான விபரங்களும் நிபந்தனைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**போட்டி விதிமுறைகள்**

- அளவு - அங்குலம் 14×18 அளவு
- வர்ணம் - சோக் (வர்ணப்பூச்சு), ஒயில் பெயின்ட், போஸ்டர் பெயின்ட், வோட்டர் கலர்ஸ் ஆகியனவற்றில் விரும்பியதைப் பயன்படுத்தலாம்.
- தலைப்பு - எந்வொரு தலைப்பிலும் சித்திரங்களை வரையலாம்.
- ஒருவர் ஆகக்கூடியதாக 5 சித்திரங்களை அனுப்பி வைக்கலாம்.
- பிரிஸில் போர்ட், கென்வஸ் துணி, ட்ரொயிங் பேப்பர் இவற்றில் விருப்பமான ஒன்றில் சித்திரத்தை வரையலாம்.

**போட்டிப் பிரிவுகள்**

- முன்பள்ளி மாணவர்கள் (5 வயதிற்குக் கீழானோர்)
- பாடசாலை மட்டத்தில் - தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையில் (13 பிரிவுகள்)
- பகிரங்க போட்டிப் பிரிவு - பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது வேறு எவரும் (18 வயதிற்குக் கீழ்)

நீங்கள் இந்தப் போட்டியில் Acron தயாரிப்பான எந்தவொரு வர்ணத்தையும் (சோக், வோட்டர் கலர்ஸ், போஸ்டர் கலர், ஒயில் பெயின்ட்) பயன்படுத்தினீர்களாயின் அவற்றின் அட்டைப் பெட்டியில் காணப்படும் வெள்ளை நிற லேபிளை சித்திரத்தின் பின்புறம் ஒட்டி அனுப்பவும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படாத 2500 சித்திரங்களுக்குரிய சான்றிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். Acron குறியீட்டு இலச்சினை ஒட்டப்பட்டுள்ள சித்திரங்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| **பரிசுத் தெரிவுகள் ( அகில இலங்கை)** | | |
| *முதலாவது இடத்தைப் பெறும் 15 பேர்* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக (தரம் 1 முதல் தரம் 13 வரை)* | *கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *இரண்டாவது இடத்தைப் பெறும் 15 பேர்* | *தெரிவிற்கு ஒருவர் வீதமாக* | *கிண்ணம்,வெள்ளிப்பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *மூன்றாவது இடத்தைப் பெறும் 15 பேர்* | *பிரிவுக்கு ஒருவர் வீதமாக* | *கிண்ணம், வெண்கலப் பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *Acron ஒயில் பெயின்ட் 15 போட்டியாளர்கள்* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதம்* | *கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *Acron அதிவிசேட வெற்றியாளர்கள் 15* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக* | *கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *Acron விசேட வெற்றியாளர்கள் 150* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக* | *தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *Acron சான்றிதழ் பெறுவோர் 400* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக* | *விருது, சான்றிதழ்* |
| *திறமைச்சான்றிதழ் 2000* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக* | *விருது, சான்றிதழ்* |

Acron லேபிள் ஒட்டப்பட்ட 100 சித்திரங்களை அனுப்பச் செய்கின்ற ஆசிரிய, ஆசிரியைமாருக்கு நினைவுச் சான்றிதழும் ஊக்குவிப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.

(இதற்கென குறிப்பிட்ட 100 சித்திரங்களுடன் ஆசிரியர்/ஆசிரியையின் பெயர், முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியனவற்றைக் குறிப்பிடல் வேண்டும்)

சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலுமான நடுவர்களாலேயே வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர் நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

வெற்றியாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படுவதுடன், 'விஜய்' பத்திரிகையிலும் தொலைக்காட்சி, வானொலி மூலமும் அறிவிக்கப்படும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படுகின்ற 2500 சித்திரங்களும் தேசிய கலாபவனத்தின் பிரதான மண்டபங்கள் இரண்டிலும் கண்காட்சிக்கு வைக்கப்படுவதுடன் குறித்த 2500 சித்திரங்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் வைத்து வழங்கப்படும்.

**போட்டி முடிவுத்திகதி 2010 ஜூலை 31.**

**முகவரி:** துஷாரா கலைவட்டம், இலக்கம் - 16/19, பிங்ஹேன, பன்னிப்பிட்டி.
அல்லது கலர் கிராஃப்ட் லங்கா, 119, பெங்க்ஷால் வீதி, கொழும்பு-11.

**தொடர்புகளுக்கு** - 011 4962520, 0714483704

## துஷாரா கலைவட்டம்

THUSHARA KALA KAVAY A

Color CRAFT

அகில இலங்கை சித்திரப்போட்டி-2010

Acron® All Island Art Competition

விஜய்

| விண்ணப்பப்படிவம் | Application Form |
|---|---|
| போட்டியாளரின் பெயர்: Applicant's Name : | |
| முன்பள்ளி/பாடசாலை/ பல்கலைக்கழகம்/பகிரங்க : Pre School, Schools, University & Open Category : | |
| பிறந்த திகதி: Date of Birth : | |
| ஆண்/பெண் Sex : | ஆண் Female ☐ பெண் Male ☐ |
| வீட்டு முகவரி: Personal Address : | |
| தொலைபேசி இல: Telephone : | |
| வகுப்பு: Grade : | |
| சித்திரத்தின் தலைப்பு: Topic : | |
| பாவித்துள்ள வர்ணம்: Medium of Expression Oil, Water color, Poster CLR, Pastels : | |

| ............................ | ............................ | ............................ |
|---|---|---|
| போட்டியாளரின் கையொப்பம் Applicant's Signature | திகதி Date | பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் Parents/Guardians Signature |

பிரதான அனுசரணை: Acron COLSTAR ஊடக அனுசரணை: விஜய

சித்திரக்கலையின் பேரபிமானம் பெற்ற முதன்மையாளர்களான துஷாரா கலைவட்ட அமைப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாணந்துறை, எலுவிலையைச் சேர்ந்த இயாத்கான்-சித்தி ஹபீழா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா இஷ்ரத், 05.05.2010 அன்று தனது ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல் - நுஸ்ரத்)



கொடஹேனையைச் சேர்ந்த நாசீம்-ரிப்கா தம்பதியரின் செல்வப் புதல்வன் முன்சிப் அஹமட், 06.05.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.



பாணந்துறை, எலுவிலையைச் சேர்ந்த மிஸ்பான்-சமீனா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் முஷ்பிக், 08.05.2010 அன்று தனது இரண்டாவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். இவரை உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல் : சியானா அஷ்ரப்)



பாணந்துறை, எலுவிலையைச் சேர்ந்த லாபிர்-ரொசானா தம்பதியரின் செல்வப் புதல்வி நுமா நெளரின், 08.05.2010 அன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல் : சுஹறதா பிஸ்தாமி)

# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

**தபால்காரன்**



பி.எனஸ் போல்,
தரம் - 10B, நவோத்யா த.ம.வித்.,
காவத்தை.




க.அபிலாஷினி, தரம் - 9T,
விஹாரமஹாதேவி பெ.கல்.,
கண்டி.

**மரம்**



எஸ்.ஜெயவேந்தர், தரம் - 2A,
தலவாக்கலை த.ம.வித்.,
தலவாக்கலை.



ஜெ.விலாஷினி,
தரம் - 4B, ஸ்ரீ சண்முகா இ.ம.கல்.,
திருகோணமலை.



எஃப்.ஹனா, தரம் - 2A,
த.ம.ம.வித்., பதுளை.

**பூக்கூடை**



எம்.பஸ்லினா,
தரம் - 8, தி/அப்துல் மஜீத் வித்.,
கிண்ணியா-01.



மொஹமட் ருஷ்தி, தரம் - 7T,
கராகொடை மு.ம.வித்.,
கேகாலை.



எஃப்.நிபா,
தரம் - 6A, மட்/பதுரியா ம.வித்.,
காத்தான்குடி-01.

**வானவில்**



றிஸ்லாம், தரம் - 3,
அல்-பாஸியதுல் நஸ்ரியா
மு.பா.ம.வித்., பேருவளை.



இஷ்கார் அஹமட், தரம் - 3B,
ஒக்ஸ்ஃபோர்ட் தே.கல்.,
பதுளை.

**வெசக்**



ஏ.ஜீ.ஹப்ஸா,
தரம் - 9H, கழுகமுவ மத்.கல்.,
கெலிஓய.

**மா மரம்**



எம்.றபீயுத்தீன், தரம் - 8V,
மட்/அல்-ஹிறா ம.வித்.,
காத்தான்குடி-05.



ஹம்பாந்தோட்டை, சுனாமிகமவைச் சேர்ந்த ரிஸ்வான்-பர்ஸானா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா ரிஷாதா, 17.05.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளை வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல் : எம்.பைஸல்)

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



யக்கஸ்முள்ளையைச் சேர்ந்த முனவ்பர்-சித்தி நிசா தம்பதியரின் செல்வப் புதல்வர்களான முஹம்மட் பஹத் மற்றும் பாத்திமா நுஹா ஆகியோர் 24.05.2010 அன்று தமது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளனர். இவர்களைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.






கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.அனுஷாகுமாரி,
தரம் - 7, எக்பர்த் த.வித்.,
சூரியகந்தை.



உ.சூரியகலா, தரம் - 10,
சீனக்குடா த.வித்.,
திருகோணமலை.



மித்யா துலாஞ்சலி,
தரம் - 6G,
கிங்ஸ்டன் ச.கல்.,
கொழும்பு-15.



ஆர்.நவீன், தரம் - 5H,
சென்.மேரிஸ் ம.கல்.,
பொகவந்தலாவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகானின் அறிவுரை

கலிங்கநாட்டு மன்னன் சக்திவர்மன் பேராசை பிடித்தவன். பல சிற்றரசுகளை தன் வசப்படுத்திக் கொண்டான். இருப்பினும், மற்றும் பல பேரரசுகளை வெல்வதற்காக அஸ்வமேத யாகம் ஒன்றை நடத்தினான். அதன்படி, அலங்கரித்த குதிரையை முன்னே போகும்படி செய்து அதன் பின்னே போர் வீரர்கள் காவல்புரிந்து செல்வது வழக்கம்.

வழியில் யாரேனும் குதிரையைப் பிடித்துக் கட்டினால் அவர்கள் போரிடத் தயார்.பணியமட்டோம் எனப் பொருள். அப்போது அவர்களை வென்று முன்னேற வேண்டும். ஆனால், சக்திவர்மனை எதிர்த்து யாரும் மோத விரும்பவில்லை. சிற்றரசர்கள் பயந்து ஒதுங்கினர். இதனால், கர்வம் கொண்ட சக்திவர்மன் இறுமாப்போடு வீரநடை போட்டான்.

அச்சமயம் ஒரு மகான் எதையும் கண்டு அஞ்சாமல் சக்திவர்மனின் படைகளுக்கு எதிரில் வந்துகொண்டிருந்தார். ''யார் இந்த சாமியார்? கொஞ்சமும் அச்சமின்றி எனது படைகளை வழிமறித்து நிற்கிறாரே'' என்று கோபம் கொண்டான் சக்திவர்மன்.

''ஏ! ஆண்டிப்பண்டாரமே! எனது யாகக் குதிரைக்கு வழிவிடாமல் எதிரே வர உனக்கு என்ன துணிச்சல்? உனக்கு உயிர்மீது ஆசையில்லையா?'' என்று வினவினான்.


''மன்னர் பெருமானே! உனது கோபத்தை விட்டுவிடு. நீ பிறக்கும் போது மன்னனாகவா பிறந்தாய்? இல்லையே! மக்களால் மன்னனாக ஆக்கப்பட்டாய். நீ பிறக்கும்போது என்ன கொண்டு வந்தாய் அல்லது போகும்போது என்னதான் கொண்டு போகப் போகிறாய்? பல நாடுகளைக் கைப்பற்றியுள்ளாய். மலைபோல் பொன்னும் பொருளும் சேர்த்து விட்டாய். இதற்கு மேலும் உன்னை ஆசை விடவில்லையா?

செத்த பாம்பை அடிப்பதுதான் உன் வீரமா? எல்லா அரசர்களும் உனக்குக் கப்பம் கட்டுகின்றனர். அப்படி இருக்கப் போர் எதற்கு? போரில் பலர் உயிர் இழக்கின்றனர். அதனால், எத்தனை குடும்பங்கள் நாசமாகின்றன. அனாதைக் குழந்தைகள், கணவனை இழந்த தாய்மார்கள் இவர்கள்தான் இனி உன் பிரஜைகள். குடிமக்கள் மகிழ்ச்சியோடு வாழ நாட்டைச் செழிப்பாக வைத்துக்கொள்வதுதான் ஓர் அரசனின் கடமை. அதுதான் ஆண்டவன் கட்டளை'' என்று சாந்தமாகக் கூறினார்.

இச்சொல்லைக் கேட்டதும் சக்திவர்மன் தன் தவறை உணர்ந்து தன் செயலுக்காக வருந்தி, சாதுவின் கால்களில் விழுந்தான். ''சுவாமி! தாங்கள் என் கண்களைத் திறந்துவிட்டீர்கள். அறியாமையாலும் பேராசையாலும் மாபெரும் தவறு செய்துவிட்டேன். இப்பாவச் செயலில் இருந்து மீள தாங்கள்தான் வழி கூறவேண்டும்'' என்று வணங்கினான்.

''மன்னா! தவறு செய்வது மானிடனின் இயல்பு. நீ அதை உணர்ந்துவிட்டாய். உனக்கு ஆண்டவன் பாவமன்னிப்பு அளிப்பார். நீ செய்ய வேண்டியதெல்லாம் அபகரித்த நாடுகளை அந்நாட்டு அரசர்களிடம் ஒப்படைத்துவிடுவதுதான். கொள்ளையடித்த பொருட்களைக் கொண்டு ஏழை, எளியவர்களுக்கு மற்றும் போரினால் நாசம் அடைந்த குடும்பங்களுக்கு உதவி, மறுவாழ்வு கொடு. உண்ண உணவு, உடுக்க உடை, தங்க வீடு இவை மக்கள் மகிழ்ச்சியோடு வாழ அத்தியாவசியமாகும். இதுதான் ஆண்டவனின் விருப்பமுமாகும்'' என்றார்.

சக்திவர்மன் சாதுவின் அறிவுரைப்படி தன் வீரர்களை நாடு திரும்பக் கட்டளையிட்டான். ஏழை எளியவர்களுக்கு கொள்ளையடித்த பொருட்களை வாரி வழங்கினான். அமைச்சரை அழைத்து சாதுவின் அறிவுரைகளை உடனே அமுல்படுத்த துரித நடவடிக்கைகளை எடுக்குமாறு கூறினான். இதனால், சில தினங்களில் கலிங்கநாடு தேவலோகமாக மாறியது.






# பறவைநாகம் வரும்போது ஏற்பட்ட இரைச்சல்

மூன்று நாட்களின் பின்னர் குருவிக் காலில் நின்று வட்டமாகச் சுழன்று கொண்டிருந்த ஒரு சிறு குடிசைக்கு அருகே நூற்கண்டு உருண்டு சென்று நின்றது. வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் உரத்த குரலில் கூறினான்.

''சின்னஞ்சிறு குடிலே, சின்னஞ்சிறு குடிலே, தயவு செய்து உனது பின்புறத்தை மரங்களுக்கும் முகப்பை எனக்கும் காட்டு'' குடிசை இவானை நோக்கித் திரும்பியது. இவான் அக்குடிசையின் கதவைத் திறந்தபோது கரகரத்த குரல் ஒன்று பேசியது.

''ஆகா மாமிச வாடை அடிக்கிறதே! உனக்கு இங்கு என்ன வேண்டும்?''

வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் பாபா-யகாவிடம் பெற்ற நூற்கண்டைக் காட்ட, அங்கிருந்த சூனியக்காரி வியப்புடன் கூறினாள்; ''அன்பே நீ எனக்கு அந்நியன் அன்று. என் சகோதரியால் அனுப்பப்பட்ட நல்ல விருந்தாளி. நீ ஏன் இதை என்னிடம் முன்னரே சொல்லவில்லை?''

தனது விருந்தாளிக்கு ஓடிச்சென்று விருந்திற்கு ஏற்பாடு செய்தாள். பின்னர் அவனை அழைத்து ''வயிறு நியைச் சாப்பிடு, குடி, படுத்து ஓய்வுகொள், பின்னர் நீ வந்த காரியம் பற்றிப் பேசலாம்'' என்றாள்.

வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் வயிறார உண்டு, பருகி ஓய்வுக்காகப் படுத்தான். சூனியக்காரியான பாபா-யகாவின் இரண்டாவது சகோதரி அவனது படுக்கை அருகே அமர்ந்து அனைத்து விபரங்களையும் கேட்கத் தொடங்கி னாள். தான் யார், எங்கிருந்து, எங்கே செல்கிறேன் போன்ற விபரங்களை அவளிடம் தெரிவித்தான் இவான். பாபா- யகாவின் இரண்டாவது சகோதரி கூறினாள்;

''நீ செல்லும் இடம் அதிக தூரம் இல்லை. ஆனால், நீ அங்கு உயிருடன் போய்ச் சேர்வாயா என்று எனக்குத் தெரியவில்லை. தானே வாசிக்கும் இசைக்கருவி, நடனமாடும் வாத்து, பாடும் பூனை ஆகிய அனைத்தும் மலைகளின் பறவைநாகமாகிய எங்கள் மூன்றாவது சகோதரியின் மகனுக்குச் சொந்தமானவை. துணிவுமிக்க பல இளைஞர்கள் நீ செல்லும் அந்த இடத்திற்குச் சென்றார்கள். ஆனால், ஒருவர் கூடத் திரும்பி வரவில்லை. ஏனெனில், அவர்கள் அனைவருமே பறவைநாகத்துக்கு இரையாகிப் போனார்கள். எனவே, எங்களது மூன்றாவது சகோதரியை உனக்கு உதவும்படி நாங்கள் கேட்கவேண்டும், அவள் உதவாவிட்டால் நீ உயிருடன் திரும்பமாட்டாய். என்ன செய்வதென்று எனக்குத் தெரியும். அவளுக்கு விஷயத்தைச் சொல்ல புத்திசாலி அண்டங்காக்கையை அவளிடம் தூது அனுப்பி வைக்கிறேன். இப்போது நீ தூங்கு, அதிகாலையில் உன்னை நான் எழுப்புகிறேன்''

வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் இரவில் ஆழ்ந்து உறங்கினான். அதிகாலையில் எழுந்து தனது பயணத்தைத் தொடர ஆயத்தமானான். பாபா-யகாவின் இரண்டாவது சகோதரி கொடுத்த உணவை உண்டான். பின்னர் அவள் சிவப்புக் கம்பளி நூற்கண்டு ஒன்றை அவனுக்குக் கொடுத்து அவனை வழியனுப்பி வைத்தாள். அப்போது கம்பளி நூற்கண்டு உருளத் தொடங்க, வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் அதனைப் பின்தொடர்ந்து சென்றான். தொடர்ந்து மூன்று நாட்கள் வரை நடந்து போய்க்கொண்டே இருந்தான். களைப்பாக இருந்த போதெல்லாம் கம்பளி நூற்கண்டைக் கையில் எடுத்துக்கொண்டு உட்கார்ந்து நன்கு ஓய்வெடுத்தான். ரொட்டிகளை உண்டான். நீரைப் பருகினான். பின்னர் தனது பயணத்தைத் தொடர்ந்தான்.

நான்காம் நாள் இறுதியில் கம்பளி நூற்கண்டு ஒரு பெரிய வீட்டின் முன் நின்றது. அந்த வீடு பன்னிரண்டு கற்களின்மேல், பன்னிரண்டு தூண் களில் நின்றது. உயரமான வேலியால் சுற்றி அடைக்கப்பட்டிருந்தது.

ஒரு நாய் அங்கிருந்து குரைக்கவே, சூனியக்காரிகளின் மூன்றாவது சகோதரி முற்றத்திற்கு ஓடிவந்தாள். அவள் நாயை அமைதிப்படுத்தி விட்டுக் கூறினாள்; ''உன்னைப் பற்றிய விபரம் எல்லாம் எனக்குத் தெரியும் இளைஞனே. அண்டங்காக்கை இங்கே வந்திருந்தது. உனக்கு உதவி செய்ய நான் வழி கண்டுபிடிப்பேன். உள்ளே வந்து கொஞ்சம் உண்டு, பருகு, உனக்குப் பசியாகவும் நடந்ததால் அலுப்பாகவும் இருக்கும்''

அவனை உள்ளே அழைத்துச் சென்று அவன் உண்ணவும் பருகவும் கொடுத்தாள். ''இப்போது நீ இங்கே ஒளிந்து கொள். என் மகன் விரைவில் இங்கு வருவான். அவன் வரும்போது எப்போதுமே மிகவும் கோபமாகவும் பசியாகவும் இருப்பான். ஆகவே, அவன் உன்னைக் கண்டால் விழுங்கி விடுவானோ என்று அஞ்சுகிறேன்''

''இப்போது நீ நிலவறைக்குள் போய், நான் உன்னை அழைக்கும் வரை ஒளிந்திரு''

வயதில் இளைய, அறிவில் மூத்த இவானை அவள் நிலவறையில் வைத்து மூடியவுடன் அங்கு பயங் கரமான இரைச்சலும் பேரோசையும் எழுந்தது. அந்த வீட்டின் கதவு அகலத் திறந்தது. பறவைநாகம் உள்ளே பாய்ந்து வரவே, அங்குள்ள சுவர்கள் பயங்கரமாக ஆடின.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் நாம் அம்மாவுக்கும் கமலுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

අම්මා: ආ... පුතා ආවාද? කොහොමද ගෙයක් ලැබුණද?
ஆ.... புதா ஆவாத? கொஹொமத கெயக் லெபுனத?
அம்மா: ஆ..... மகன் வந்துட்டீங்களா? எப்படி வீடொன்று கிடைத்ததா?



කමල්: ඔව් අම්මේ ගෙයක් ලැබුණා.
ஒவ் அம்மே கெயக் லெபுனா.
கமல்: ஆம் அம்மா வீடு ஒன்று கிடைத்தது.

අම්මා: ලොකු ගෙයක්ද? පොඩි ගෙයක්ද?
லொகு கெயக்த? பொடி கெயக்த?
அம்மா: பெரிய வீடா? சிறிய வீடா?


කමල්: පොඩි ගෙයක් අම්මේ. අපට ඇති.
பொடி கெயக் அம்மே. அபட எதி.
கமல்: சிறிய வீடொன்று அம்மா. எங்களுக்குப் போதுமானது.

අම්මා: ඔව් ලොකු ගෙයක්නම් එපා. කුලිය කීයද පුතා?
ஒவ் லொகு கெயக்நம் எபா. குலிய கீயத புதா?
அம்மா: ஆம் பெரிய வீடென்றால் வேண்டாம். எவ்வளவு வாடகை மகன்?

කමල්: මාසයකට රුපියල් පන්දාහයි.
மாசயகட ருபியல் பன்தாஹய்.
கமல்: மாதம் ஐயாயிரம் ரூபா.

අම්මා: ඒ ගාන වැඩි නැද්ද පුතා?
ஏ கான வெடி நெத்த புதா?
அம்மா: அந்தக் கணக்கு அதிகமில்லையா மகன்?

කමල්: නැහැ අම්මේ. අද ඊට අඩුවෙන් ගෙවල් ලැබෙන්නේ නැහැ.
நெஹெ அம்மே. அத ஈட அடுவென் கெவல் லெபென்னே நெஹெ.
கமல்: இல்லை அம்மா. தற்போது அதற்குக் குறைவாக வீடுகள் கிடைப்பதில்லை.



අම්මා: කමක් නැහැ පුතාගේ කැමැත්තක්.
கமக்நெஹெ புதாகே கெமெத்தக்.
அம்மா: பரவாயில்லை மகனின் விருப்பம்.

කමල්: අම්මා හෙමිහිට බඩු ලෑස්ති කරගන්න.
அம்மா ஹெமிஹிட்ட படு லேஸ்தி கறகன்ன.
கமல்: அம்மா மெல்ல மெல்ல சாமான்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்.

අම්මා: හොඳයි පුතා.
ஹொந்தய் புதா.
அம்மா: நல்லது மகன்.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

*உதாரணம்:* வீடு ஒன்று கிடைத்துள்ளது.
ගෙයක් ලැබුණා.

i. சிறிய வீடு போதுமானது.
..........................................................................................
ii. பெரிய வீடு வேண்டாம்.
..........................................................................................
iii. உங்களுடைய விருப்பம்.
..........................................................................................






'**Will**' சகிதம் மூல வினைச்சொல்லைக் (Stem Verb) கையாண்டு அமைக் கப்பட்ட எதிர்கால வாக்கியங்களையும் மற்றும் 'going to' சகிதம் மூல வினைச் சொல்லைக் கையாண்டு அமைக்கப்பட்ட எதிர்கால வாக்கியங்களையும் மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம் .

(அ) I will spend more money for my studies.
நான் எனது படிப்புக்கு அதிக பணம் செலவழிப்பேன்.
(I will spend - நான் செலவழிப்பேன்)

(ஆ) I am going to spend more money for my studies.
நான் எனது படிப்புக்கு அதிக பணம் செலவழிக்கப் போகின்றேன்.
(I am going to spend - நான் செலவழிக்கப் போகின்றேன்)

---

(இ) You will earn more money for your family.
நீ உனது குடும்பத்துக்கு அதிக பணம் சம்பாதிப்பாய்.
(You will earn - நீ சம்பாதிப்பாய்)

(ஈ) You are going to earn more money for your family.
நீ உனது குடும்பத்துக்கு அதிக பணம் சம்பாதிக்கப் போகின்றாய்.
(You are going to earn - நீ சம்பாதிக்கப் போகின்றாய்)

---

(உ) We will play cricket in that ground.
நாங்கள் அந்த மைதானத்தில் கிரிக்கெட் விளையாடுவோம்.
(We will play - நாங்கள் விளையாடுவோம்)

(ஊ) We are going to play cricket in that ground.
நாங்கள் அந்த மைதானத்தில் கிரிக்கெட் விளையாடப் போகின்றோம்.
(We are going to play - நாங்கள் விளையாடப் போகின்றோம்)

---

(எ) They will swim in the river tomorrow.
அவர்கள் நாளை அந்த ஆற்றில் நீந்துவார்கள்.
(They will swim - அவர்கள் நீந்துவார்கள்)

(ஏ) They are going to swim in the river tomorrow.
அவர்கள் நாளை அந்த ஆற்றில் நீந்தப் போகின்றார்கள்.
(They are going to swim - அவர்கள் நீந்தப் போகின்றார்கள்)

---

* He, She, It முதலான பிரதிப்பெயர்ச்சொற்களை (Pronouns) எழுவாய் பகுதியில் கையாண்டு அமைக்கப்பட்ட வாக்கியங்களை இங்கே அவதானிப் போம்.

(அ) He will travel to Kandy by train.
அவன் ரயில் மூலம் கண்டிக்குப் பயணிப்பான்.
(He will travel- அவன் பயணிப்பான்)

(ஆ) He is going to travel to Kandy by train.
அவன் ரயில் மூலம் கண்டிக்குப் பயணிக்கப் போகின்றான்.
(He is going to travel - அவன் பயணிக்கப் போகின்றான்)

---

(இ) She will meet the principal on Monday.
அவள் திங்கட்கிழமையன்று அதிபரைச் சந்திப்பாள்.
(She will meet - அவள் சந்திப்பாள்)

(ஈ) She is going to meet the principal on Monday.
அவள் திங்கட்கிழமையன்று அதிபரை சந்திக்கப் போகின்றாள்.
(She is going to meet - அவள் சந்திக்கப்போகின்றாள்)

---

(உ) It will jump into the river.
அது ஆற்றுக்குள் பாயும்.
(It will jump - அது பாயும்)

(ஊ) It is going to jump into the river.
அது ஆற்றுக்குள் பாயப் போகின்றது.
(It is going to jump - அது பாயப் போகின்றது)

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்காஸோவின் ஓவியம் ஏலத்தில் சாதனை!



பிக்காஸோவினால் வரையப்பட்ட ஓவியமானது 106 மில்லியன் டொலர்களுக்கு ஏலத்தில் விற்பனையாகி சாதனை படைத்துள்ளது.

1932 ஆம் ஆண்டில் வரையப்பட்டதாக கருதப்படுகின்ற இந்த ஓவியம் நியூயோர்க்கில் நடைபெற்ற ஏல விற்பனையிலேயே இந்த விலைக்கு கோரப்பட்டது. இந்த ஏலம் விடலில் தொலைபேசி வழியே தொடர்பு கொண்ட ஒருவரே ஏலத்தை வென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர், கடந்த பெப்ரவரி மாதம் 104.3 மில்லியன் டொலருக்கு ஓவியமொன்று கூடிய விலைக்கு ஏலத்தில் விற்கப்பட்டிருந்தது. இதனைத் தற்போதைய தொகை முறியடித்துள்ளது.

70-90 மில்லியன் டொலர் கணக்கிற்கே இந்த ஓவியம் ஏலம் போகுமென எதிர்பார்க்கப்பட்டதாம். ஆயினும், அதனைவிடக் கூடிய தொகைக்கு விற்பனையாகியுள்ளமை மகிழ்ச்சியைத் தருவதாக ஏலம் விட்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.




## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# பிரிட்டன் தேர்தலில் எதிர்க்கட்சி வெற்றி

பிரிட்டனில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 13 வருடங்கள் ஆட்சியிலிருந்த தொழிற் கட்சி தோல்வியடைந்துள்ளது. இருப்பினும், எதிர்க்கட்சியான கொன்சர்வேட்டிவ் கட்சி அதிகப்படியான ஆசனங்களை வெற்றியீட்டிய போதிலும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறாததும் குறிப்பிடத்தக்கது.

எனவே, பிரதான கட்சிகள் இரண்டுமே அறுதிப்பெரும்பான்மையைப் பெறாததன் காரணமாக அறுதிப் பெரும்பான்மையை அடைவதற்காக மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ள லிபரல் கட்சியின் ஆதரவைப் பெறுவதற்காக கொன்சர்வேட்டிவ் கட்சி பேச்சுவார்த்தைகளை நடத்தியது.

தேர்தல் பெறுபேறுகளின்படி 650 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான இத்தேர்தலில் கோர்டன் பிரவுன் தலைமையிலான தொழிற் கட்சி 258, ஆசனங்களையும்,




டேவிட் கெமரூன் தலைமையிலான கொன்சர்வேட்டிவ் கட்சி 306 ஆசனங்களையும் நிக் கிளேக்கின் தலைமையிலான லிபரல் கட்சி, 57 ஆசனங்களையும் ஏனைய கட்சிகள் 28 ஆசனங்களையும் வெற்றி கொண்டுள்ளன.

இதற்கமைய, ஆட்சியமைக்கத் தேவையான அறுதிப் பெரும்பான்மைக்கு 326 ஆசனங்கள் தேவை என்ற நிலை உள்ளது. அதற்கு இன்னும் 20 ஆசனங்களே குறைவான நிலையில் உள்ள கொன்சர்வேட்டிவ் கட்சி அதனை அடைவதற்காகவே லிபரல் கட்சியுடன் பேச்சுக்களை நடத்தியது.

இதேவேளை, கடைசியாகக் கிடைக்கப்பெற்ற செய்திகளின் படி, தோல்வியடைந்த கோர்டன் பிரவுன் பிரதமர் பதவியிலிருந்து இராஜினாமா செய்ததையடுத்து, அடுத்த ஆட்சியை அமைக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் கொன்சர்வேட்



டிவ் கட்சிக்கு ஏற்பட்டுள்ளமையினால், அக்கட்சியின் தலைவர் டேவிட் கெமருனை ஆட்சி அமைக்குமாறு எலிஸபெத் மகாராணியார் அழைப்பு விடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 256

**கேள்வி:** பிரிட்டனின் புதிய பிரதமரின் பெயர் என்ன?

**சரியான விடை........................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 256,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

## போட்டி இல - 254 இன் சரியான விடை: பிலிப்பைன்ஸ்

**பரிசு பெறுவோர்**

கே.ஷாதிர் மொஹமட்,
32, ரஸகல்ல வீதி, பலாங்கொடை.

பா.விஜய்,
அராலி வடக்கு, செட்டியமடம்,
வட்டுக்கோட்டை.

ஃபாத்திமா அமானி,
173, பாண்டியன் குளம், நச்சாதுவ, அனுராதபுரம்.

# ஒபாமாவின் படம் பொறித்த பேனாவை விற்றதற்கு அபராதம்

## சீனாவில் சம்பவம்

அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபாமாவின் முகத்தையும் பெயரையும் அடையாளமாகத் தாங்கி விற்பனை செய்யப்பட்ட போள்பெயின்ட் (குமிழ்முனை) பேனாவை சந்தைப்படுத்திய குற்றத்திற்காக குறித்த நிறுவனம் பெருமளவு அபராதத் தொகையைச் செலுத்தவேண்டிய நிலைமை சீனாவில் ஏற்பட்டது.



கிழக்கு சீனாவின் ஷீஜெயங் என்ற பிரதேசத்தின் வர்த்தக நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் அதிகார சபையினாலேயே மேற்படி விற்பனை நிறுவனத்திற்கு எதிராக சீன நாணயப்படி 10,000 யுவான் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும், இதே விளம்பரப்படுத்தல் பாணியில் விற்பனை செய்வதற்கு தயார்படுத்தப்பட்டிருந்த 2000 பேனாக்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

'ஒபாமாவின் தெரிவு இந்த பேனாவேயாகும்' என்ற ஆங்கில வசனம் பொறிக்கப்பட்டிருந்த இந்தப் பேனாக்களைத் தயாரித்த தொழிற்சாலையின் உரிமையாளர் ஆங்கில மொழி தெரியாதவர் என்ற காரணத்தினாலேயே இந்நிலைக்கு ஆளாகியமை குறிப்பிடத்தக்கது.

சீனா-அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையே அரசியல் ரீதியில் பாரிய முரண்பாடுகளும் பனிப்போரும் நடந்து வருகின்ற சூழ்நிலையின் காரணமாகவே சீனாவில் இத்தகைய கடுமையான கட்டுப்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.



# தபால் துறை விபரங்கள்

*2009 ஆம் ஆண்டில் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி தபால் துறை சம்பந்தமான சில விபரங்கள் வருமாறு;*

- *இலங்கையில் வகைப்படுத்தப்பட்ட தபால் தொகுதிகள்-6,729*
- *இலங்கையில் உள்ள தபால் நிலையங்களின் எண்ணிக்கை-4,737*
- *இலங்கையிலுள்ள அரச தபால் நிலையங்கள்-4,053*
- *இலங்கையிலுள்ள பிரதான தபால் அலுவலகங்கள்-643*
- *இலங்கையிலுள்ள உப தபாலகங்களின் எண்ணிக்கை-3410*
- *இலங்கையிலுள்ள தபால் முகவர் நிலையங்கள்-463*
- *இலங்கையிலுள்ள தனியார் தபால் நிலையங்கள்-684*
- *சராசரியாக தபால் நிலையமொன்றின் சேவையைப் பெறும் மக்களின் எண்ணிக்கை-4,268*

# தெரிந்து கொள்ளுங்கள்



- அமெரிக்காவின் மிகப்பெரிய மாநிலம் எது?
  **கெலிஃபோர்னியா**
- கியூபா புரட்சி ஏற்பட்ட வருடம்?
  1959
- ஈரான்-ஈராக் யுத்தம் நடைபெற்ற காலகட்டம்?
  1980-1988



- ஈரான்-ஈராக் யுத்தத்தின் ஆரம்பகர்த்தா யார்?
  **சதாம் ஹுசேன்**



- இந்தியாவின் முதலாவது பெண் ஜனாதிபதி?
  **பிரதீபா படேல்**
- 'பெரஸ்த் ரொயிக்கா' என்பது எதனை?
  **1991 ஆம் ஆண்டில் சோவியத் ஒன்றியத்தின் ஜனாதிபதியாக இருந்த கொர்பச்சேவினால் அறிமுகம் செய்யப்பட்ட பொருளாதார சீர்திருத்தத் திட்டமே இது அந்நாளைய சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியடைவதற்கு இத்திட்டமே காரணமாக அமைந்தது.**



- 2007 ஆம் ஆண்டு தொடக்கம் தமது திரைப்படங்களில் புகைத்தல் தொடர்பான காட்சிகள் இடம்பெறமாட்டாது என்று தீர்மானித்த உலகப் புகழ் திரைப்பட நிறுவனம் எது?
  **டிஸ்னி நிறுவனம்**
- உலகின் நவீன ஏழு அதிசயங்கள் எப்போது பெயரிடப்பட்டது?
  2007 ஜூலை 07



- ரஷ்யாவின் இரும்பு மனிதர் என்று அழைக்கப் படுபவர் யார்?
  **ஜோசப் ஸ்டாலின்**
- நவீன ஏழு அதிசயங்கள் எங்கு வைத்து அறிவிக்கப்பட்டது?
  **போர்த்துக்கல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியக் கிண்ண

# கிரிக்கெட் போட்டிகள் ஜூன் மாதம் இலங்கையில்...




பத்தாவது ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதி ஆரம்பமாகின்றன. இலங்கையில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய அணிகள் கலந்துகொள்கின்றன.

மேற்படி, அணிகள் ஒவ்வொரு அணியுடனும் ஒரு தடவை 'லீக்' போட்டிகளில் போட்டியிடும். அதற்கமைய, லீக் போட்டியில் முதலாம், இரண்டாம் இடத்தைப் பெறும் அணிகள் இறுதிப் போட்டியில் கலந்துகெள்ளும். இறுதிப் போட்டிகள் ஜூன் மாதம் 24 ஆம் திகதி நடைபெறும்.

2022 உலகக் கிண்ண

# கால்பந்தாட்டப் போட்டிகள் வடகொரியாவிலும் நடைபெறுமா?




2022 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியை தென்கொரியாவில் நடத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்தால் அதில் குறிப்பிட்ட சில போட்டிகளை வடகொரியாவிலும் நடத்துவதற்கு தென்கொரியா விருப்பம் தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கால்பந்தாட்டப் போட்டியை நடத்துவதற்கு எட்டு நாடுகள் கோரிக்கை விடுத்துப் போட்டியிடுகின்றன. இந்த எட்டு நாடுகளில் தென்கொரியாவும் அடங்குகின்றது.

மேற்படி, வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காக அதற்கான வியூகங்களை மேற்கொள்வதற்கு பிரத்தியேகமான குழுவொன்றை தென்கொரியா அமைத்துள்ளது. இந்த குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் ஹன்சங்ஜூ கருத்துத் தெரிவிக்கையிலேயே, தமது நாட்டில் உலகக் கிண்ணப் போட்டியை நடத்தும் வாய்ப்புக் கிட்டினால் அவற்றில் சில போட்டிகளை வடகொரியாவில் நடத்துவதற்கு விருப்பம் கொண்டுள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

KOREA 2022

BIDDING NATION KOREA



ஐ.பி.எல் போட்டிகளில் கலந்து கொள்கின்ற வெளிநாடுகளைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள் மற்றும் கிரிக்கெட் வர்ணனையாளர்கள் ஆகியோரும் வருமான வரி செலுத்தவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஐ.பி.எல் போட்டிகளில் கலந்துகொள்கின்ற வீரர்கள் இதில் பதிந்து தமக்கு உரித்தான பதிவு இலக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

குறித்த பதிவிற்கான அட்டையைப் பெறாதவர்கள் ஐ.பி.எல் இல் தமக்குக் கிடைக்கின்ற வருமானத்தில் 20 வீதத்தை அபராதமாகச் செலுத்த வேண்டியிருக்கும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், முறைப்படி பதிவு அட்டையை வைத்திருப்பவர்கள் வருமானத்தில் 10 சத வீதத்தை மாத்திரமே வரியாகச் செலுத்த வேண்டியிருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஐ.பி.எல் போட்டியிலும் வருமானவரி அறவீடு



# மொஹமட் அலியை மிஞ்சிய போட்டியாளர்?





உலகப் புகழ் குத்துச்சண்டை வீரராக கருதப்படுகின்ற மொஹமட் அலியைவிடத் தானே சிறந்த குத்துச்சண்டை வீரர் என்று பொலைட் மெய்வோட்டர் என்ற குத்துச்சண்டை வீரர் தெரிவித்துள்ளார்.

33 வயதாகின்ற அவர் இதுவரை 40 குத்துச் சண்டைப் போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், கருத்துத் தெரிவித்துள்ள அவர் உலகப் புகழ் அதிபார குத்துச்சண்டை வீரர்களான மொஹமட் அலி, ரே ரொபின்சன் ஆகியோரை என்னையும்விட சிறந்த வீரர்கள் என்று கருதமாட்டேன். அதிலும் என்னைவிடத் திறமையான வீரர்கள் உலகில் எவருமே இல்லை என்றும் எனவே, குத்துச் சண்டை சங்கத்தின் போட்டிகளில் கலந்து கொண்டு தான் அதனை தாம் நிரூபிக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்திலும் 20/20:

# ரகசியப் பேச்சில் லலித் மோடி



சட்டவிரோதமான பணக்கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டார் என்ற குற்றச் சாட்டின்பேரில் ஐ.பி.எல் தலைவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ள லலித் மோடி, ஐ.பி.எல் பாணியிலான 20/20 போட்டித் தொடரொன்றை இங்கிலாந்திலும் நடத்துவதற்கான ரகசியப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருந்தார் என்ற செய்தியொன்று தற்போது வெளிவந்துள்ளது.

ECB

இங்கிலாந்து கிரிக்கெட் சபையே இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் தலைவர் கில்ஸ் கிளார்க் இத்தகவலை ஈமெயில் ஊடாக இந்திய கிரிக்கெட் சபைக்கு அறிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடத்துவதற்கென திட்டமிடப்பட்டிருந்த மேற்படி 20/20 கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்தின் பிராந்திய அணிகளையும் சர்வதேச தரம் வாய்ந்த கிரிக்கெட் வீரர்களையும் போட்டியிடச் செய்வதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டிருந்தன.

இந்தப் போட்டித் தொடரை நடத்தும் வழிவகைகள், திட்டமிடல் குறித்த பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்காக மூன்று நாடுகளைச் சேர்ந்த கிரிக்கெட் சபைகளின் மேலதிகாரிகளுடன் லலித் மோடி கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார் என்றும் இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவிக்கின்றது.

இதுகுறித்து விளக்கம் அளிக்குமாறு இந்திய கிரிக்கெட் சபை லலித் மோடியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2012 இல் இரண்டு சூரியன்கள்...

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டில் வானில் இரண்டு சூரியன்கள் தோன்ற இருப்பதாக சில செய்திகள் அண்மையில் வெளியாகியிருந்தன. இது தொடர்பாக சில இணையத்தளங்கள் இரண்டு சூரியன்கள் விண்ணில் பிரகாசமாக சுடர் விட்டு உதிக்கும் வீடியோ காட்சிகளையும் பரப்பி வருகின்றன. ஒருசிலர் இணையத்தையே அதற்கான பிரசாரக் கருவியாகப் பயன்படுத்துகிறார்கள்; அதற்கு வரிசையாகப் பல காரணங்களையும் அடுக்குகிறார்கள்.

"சூரியனைச் சுற்றும் ஒன்பது கிரகங்களோடு, பத்தாவதாக Planet X என்கிற கிரகமும் இருக்கிறது. இது சூரியனை ஒருமுறை சுற்றிவர 3600 ஆண்டுகளை எடுத்துக்கொள்ளும். இந்தக் கிரகம் தனது சுழற்சியின்போது ஏனைய கிரகங்களுக்கு அதிகளவு பாதிப்புகளையும் ஏற்படுத்தும். 2012 ஆம் ஆண்டளவில் இது வியாழனைக் கடக்கும்போது, ஒரு வகையான வாயுவை வெளிப்படுத்தும். இந்த வாயு வியாழக் கிரகத்தில் நிகழ்த்தும் விளைவுகளால் ஒரு குட்டிச் சூரியன் புதிதாகத் தோன்றும்" என்கிறார்கள் ஒரு தரப்பினர்.

இதேவேளை, இன்னொரு தரப்பினர் வேறு விதமாகப் பீதியைக் கிளப்புகின்றார்கள். "2012 டிசம்பர் 21 இல் சூரியன் அதன் விண்மீன் மண்டலத்தின் (Galaxy) நேரடிப் பார்வையில் வரும். இதன்போது விண்மீன் மண்டலத்தின் மையப்பகுதியில் இருக்கும் சூப்பர்நோவா கருங்குழியும் (Supernova black hole) சூரியனும் பூமியும் ஒரே நேராகச் சந்திக்கும். அப்போது





இன்னொரு சூரியன் உருவாகும்" என்பது அவர்களின் கருத்தாக இருக்கின்றது.

ஒரு சூரியன் இருக்கும்போதே இவ்வளவு வெப்பம் நிலவுகிறதே. ஆக, இரண்டு சூரியன்கள் அதுவும் ஒரே நேரத்தில் தோன்றினால் நிலைமை எப்படி இருக்கும்? இது உண்மைதானா? என்பது குறித்து தமிழ்நாடு அறிவியல் நகரத்தின் துணைத் தலைவர் அய்யம்பெருமாள் கூறும்போது; "2012 க்குப் பின்னர் எந்த விபரீத மாற்றமும் நிகழாது என்று நாஸாவே அறிவித்து விட்டது. ஒன்பது கோள்களைத் தவிர இன்னொன்றுக்கு வாய்ப்பே இல்லை. அந்த ஒன்பதில் ஒன்றாக இருந்த புளூட்டோவையே குறுங்கோள் வரிசையில் சேர்த்துவிட்டார்கள். இதைப்போல எத்தனையோ குறுங்கோள்கள் முன்பிருந்தே இருக்கின்றன. ஆனால், அவற்றால் கோள்களுக்கு எந்தப் பாதிப்பும் நிகழாது" என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில்,



"சூரியன் 450 கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. இன்னும் 450 கோடி ஆண்டுகள் தாங்கக்கூடிய அளவில் சூரியனில் ஹைட்ரஜன் இருக்கிறது. அந்த ஹைட்ரஜன் ஹீலியமாக மாற்றம் பெறுவதால்தான் நமக்கு ஒளியும் வெப்பமும் கிடைக்கின்றன. இந்த மாற்றத்தால்தான் வருடாவருடம் சூரிய வெப்பத்தின் அளவு அதிகரித்துக்கொண்டே வருகிறது. கடந்த வருடத்தைவிட இந்த வருட வெப்பத்தின் அளவு 7 இல் இருந்து 9 பொய்ண்ட் அதிகரித்திருக்கிறது. தவிர, இன்னும் 450 கோடி ஆண்டுகள் சூரியனுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை" என்றார்.

# சூரியனின் அபூர்வ படங்கள்



அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆராய்ச்சி மையம் சூரியனில் நடக்கும் மாற்றங்களை இதுவரை கண்டிராத புதிய கோணத்தில் படம்பிடித்து வெளியிட்டுள்ளது. நாஸாவின் சூரிய இயக்கக் கண்காணிப்பு செயற்கைக்கோள்தான் இந்தப் படங்களை எடுத்து அனுப்பியுள்ளது. சூரியனில் ஏற்படும் மின் காந்தப் புயல்கள், பீறிடும் பிளஸ்மா ஆகியவற்றை நெருக்கமாகப் படம் பிடிப்பதற்கென்றே நாஸா இந்த பிரத்தியேக செயற்கைக்கோளை ஏவியது.

இந்த செயற்கைக்கோள் எடுத்து அனுப்பியுள்ள படங்களை அவற்றுக்குரிய விளக்கங்களுடன் நாஸா வெளியிட்டுள்ளது. கடந்த பெப்ரவரி 11 ஆம் திகதியிலேயே இந்த செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்பட்டது.



இது குறித்து அதன் திட்டத் தலைமை விஞ்ஞானி டீன் பெஸ்னல் கூறுகையில், "சூரியன் குறித்த பல கருத்துக்களை இந்தப் புதிய படங்கள் பொய்யாக்கியுள்ளன" என்றார்.

நாஸாவின் ஹீலியோஃபிசிக்ஸ் பிரிவு இயக்குநர் ரிச்சர்ட் பிஷர் இது பற்றிக் கூறுகையில், "செயற்கைக்கோள் எந்தவித கோளாறும் இல்லாமல் செயல்பட்டு வருகிறது. கொலராடோ ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட சாதனம் உள்ளிட்ட பல முக்கிய கருவிகள் இந்த செயற்கைக்கோளில் பொருத்தப்பட்டுள்ளன" என்றார்.

# அதிக விண்வெளி வீராங்கனைகள் பணியாற்றிய 'டிஸ்கவரி'



**நாஸாவின் டிஸ்கவரி விண்கலமானது சர்வதேச விண்வெளி நிலையத்தில் இதுவரை ஒருபோதும் இல்லாதவாறு அதிகளவு விண்வெளி வீராங்கனைகளை பணியாற்றச் செய்த பெருமையைப் பெற்றிருக்கின்றது. டிஸ்கவரி விண்கலத்தின் STS-131-குழுவினரின் விண்வெளிப் பயணத்தின்போதே இதனை நிறைவேற்றக்கூடியதாக இருந்தது.**

**இவ்விண்கலத்தில் பயணம் செய்த மூன்று விண்வெளி வீராங்கனைகளும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஏற்கனவே இருந்த விண்வெளி வீராங்கனையுடன் இணைந்து பணியாற்றினர்.**

**டிஸ்கவரி விண்கலத்தின் மேற்படி பயணத்தின்போது புதிய உறங்கும் பகுதிகள், உபகரணங்கள் மற்றும் உணவு உள்ளிட்ட பல பொருட்கள் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. சர்வதேச விண்வெளி நிலையத்தின் குளிர்மையாக்கும் பகுதிக்காக புதிய அமோனியா சேமிப்புத் தாங்கியைப் பொருத்தும் முகமாக மேற்படி விண்கலத்தில் பயணித்த விண்வெளி வீரர்களுக்கு மூன்று தடவைகள் விண்வெளியில் சஞ்சரிக்க நேர்ந்தது.**

**நாஸாவின் டிஸ்கவரி விண்கலமானது சர்வதேச விண்வெளி நிலையத்திற்கான இருவார பயணத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துகொண்டு கடந்த ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி தரையிறங்கியமை குறிப்பிடத்தக்கது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 258 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எஸ்.எஃப். அமானி,
தரம் - 5A, நாச்சியாதீவு மு.ம.வித்.,
அநுராதபுரம்.

**போட்டி: 02**
சு.பிரியதர்ஷி, தரம் - 6A,
தம்பசிட்டி மெ.மி.த.க.பா.,
யாழ்ப்பாணம்.

**போட்டி: 03**
எஃப்.முஸ்னா,
தரம் - 6A,
அல்-மின்ஹாஜ் தே.பாட.,
ஹபுகஸ்தலாவை.

**போட்டி: 04**
எம்.இம்ரான், தரம் - 7E,
அஸ்ஹர் ம.கல்., அக்குறனை.

**போட்டி: 05**
எம்.மிப்லாஸ், தரம் - 9,
பொதுஹர மு.வித்., குருநாகல்.


### பாராட்டுப் பெறுவோர்:

- என்.நுஸ்ரி ஹாரிஸ், தரம்-8A, க/தெல்தோட்டை மு.ம.கல்., தெல்தோட்டை.
- மொஹமட் ஹனஸ், தரம்-4B, மின்ஹாத் தே.பாட., திக்குவல்லை.
- எஃப்.முர்ஷிதா, தரம்-8B, அல்-அதான் ம.ம.வித்., பதுளை.
- க.ருபினி, தரம்-9D, பருத்தித்துறை.
- எம்.ஷெஸான், தரம்-1A, அல்-ஹம்ரா ம.வித்., தர்கா நகர்.
- எம்.திலிப்குமார், தரம்-9B, கிரேக் த.ம.வித்., பூனாகலை.
- மஹ்மூதா மஜீத், தரம்-4, அந்-நூர் மு.ம.வித்., கபுவத்தை.
- எம்.சஃப்னி, தரம்-7A, அலிகார் மு.வித்., கல்-எளிய.
- எஃப்.ஆதிலா, தரம்-3, அஸ்ஸம்ஸ் மு.வித்., நிவ்எல்பிட்டிய.
- பி.செரினா, தரம்-2B, பண்டாரவளை த.ம.கல்., பண்டாரவளை.

## எத்தனை உள்ளன? 3



## வித்தியாசங்களில் √ அடையாளமிடுங்கள் 4



## அறிவுக்கு விருந்து 258 விடைகள்

**போட்டி: 03**

2, 7 ஆகிய உருக்கள் ஒரே மாதிரியானவை.

**போட்டி: 04**

| | |
|---|---|
| flag | rocket |
| fireworks | pie |
| drum | grill |
| picnic | hat |

**போட்டி: 05**

1. குதிரை - கனைக்கும்
2. கரடி - உறுமும்
3. சேவல் - கூவும்
4. நரி - ஊளையிடும்
5. மயில் - அகவும்

### சரியான எழுத்துக்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக 5

1. உயிர....... (னு/ணு/நு)
2. ச...... சிகை (ஞ்ச/ன்/ஞ்)
3. ஆ...... சகர் (லோ/ளோ/ல்லோ)
4. சி......நீ......கம் (று/ரு/ர/ற)
5. த.......த்திரம் (வி/றி/ரி)





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்
1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.05.26 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.
அற்லஸ் அறிவுக்கு விருந்து 261
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## பொருத்தமான கையுறையை இனங்கண்டு நிறந்தீட்டுக 1



## வலது பக்கத்தை நோக்கியிருக்கும் விலங்குகளில் புள்ளடியிடுக 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண்டவர்கள் மறைந்திருந்த ஊர்



காபாரதத்தில் பஞ்சபாண்டவர்கள் மறைந்து வாழ்ந்த அதாவது அஞ்ஞாத வாசம் செய்த நிகழ்வு ஒன்று வருகிறது. அவர்கள் மறைந்து வாழ்ந்த ஊர் இந்தியாவின் கேரள மாநிலத்தில் உள்ளதாக ஒரு நம்பிக்கை நிலவுகிறது.

கேரள மாவட்டத்தின் இடுக்கி மாவட்டத்தில் உள்ள மறாயூர் என்னும் ஊரே அது என்று நம்பப்படுகின்றது. இந்த ஊரில் சந்தனமரக் காடுகள் பல உள்ளன. இங்குள்ள பாறைச் சித்திரங்கள் கற்காலத்தை நினைவுபடுத்துகின்றனவாம். மறா என்றால் மறைந்திருந்த என்றும் ஊர் என்றால் இடம் என்றும் பொருள்படுகின்றது. பாண்டவர்கள் இங்கு மறைந்து வாழ்ந்ததால் மறைஞ்சிருன்ன ஊர் (Maranjirunna Oor) என்று பெயர் வந்திருக்கலாமென்றும் பின்னர் அதுவே மறாயூர் (Marayoor) என்று மாறியிருக்கலாமென்றும் நம்பப்படுகிறது.

எனினும், இந்தப் பெயருக்கு வைக்கப்படும் இன்னொரு வாதமும் உண்டு. அதாவது, மல, ஊர் என்னும் பெயரே மருவி மறாயூர் என்று வந்ததாம். மல என்றால் மலை, ஊர் என்றால் பூமி. மலைகளுக்கு மத்தியில் இந்த ஊர் மறைந்திருப்பதால் இந்தப் பெயர் வந்திருக்கலாம் என்றும் கூறுகிறார்கள்.

இன்னொரு விளக்கம் மறவரின் ஊர் என்பதாகும். இங்கு மறவர் என்னும் ஆதிவாசி இனம் ஒன்று வாழ்ந்ததாம். இவர்கள் காட்டில் மறைந்திருந்து வருவோர் போவோரைத் தாக்கி வழிப்பறிக் கொள்ளைகளில் ஈடுபட்டனராம். இவர்கள் இங்கு மறைந்திருந்ததால் இந்தப் பெயர் வந்தது என்றும் நம்புகின்றனர்.





கற்கால நாகரிகத்தை நினைவுபடுத்தும் ஓர் இடமாகவும் இந்த ஊர் திகழ்கின்றது. பழங்கால பாறைகள், குகைகள், செதுக்கல் வேலைப்பாடுகள் என்பனவற்றை இங்கு காணக்கூடியதாக உள்ளது. பதினெட்டாம் நூற்றாண்டில் திப்பு சுல்தானிடம் அரசர் திருமலைநாயக்கர் தோல்வி அடைந்தபோது தமிழ் நாட்டிலிருந்து மக்கள் இங்கு வந்து குடியேறினார்களாம். இடம்பெயர்ந்த இந்த மக்கள் இங்கு ஐந்து கிராமங்களை உருவாக்கினார்களாம். காந்தலூர், கீஸாந்தூர், கறாயூர், மறாயூர், கோட்டக்குடி என்பனவே இக்கிராமங்களாகும். இந்தக் கிராமங்கள் 'அஞ்சு நாடு' என்று அழைக்கப்பட்டன.

எப்படியிருந்தபோதிலும் இந்த இடங்களின் பெயர்கள் மிகப் பழைமையானவை. பழைமையை நினைவுபடுத்தும் வகையில் இன்றும் இக்கிராமங்களில் ஆதிவாசிகள் பலர் வாழ்கின்றனராம்.

# நேருவைக் கவர்ந்த பலூன்

குழந்தைகள்மீது மிகுந்த அன்பு கொண்டவர் முன்னாள் இந்திய பிரதமர் அமரர் ஜவஹர்லால் நேரு. குழந்தைகள் அவரை அன்புடன் 'நேரு மாமா' என்றே அழைப்பார்கள்.



நேரு மாமா சில நேரங்களில் குழந்தைளைப் போலவே மாறி விடுவார்.

ஒரு சமயம் மதுரை மாவட்டத்தில் பயணத்தை மேற்கொண்டபோது வழியில் வியாபாரி ஒருவர் பலூன்களை விற்பனை செய்வது அவரைக் கவர்ந்தது. காரை நிறுத்தச் சொல்லி கீழே இறங்கினார்.

''பலூன் என்ன விலை?'' என்று கேட்டார்.

படிப்பு வாசனையுள்ள அந்த பலூன் வியாபாரி, நாளிதழ்களில் நேருஜியின் படத்துடன்கூடிய செய்திகளைப் படித்துப் பழக்கப்பட்டு வந்ததனால் நேருவைப் பார்த்ததும் அகமகிழ்ந்தார்.

''காசே வேண்டாம் சேர். சும்மா தருகிறேன்'' என்றார் மிகமகிழ்வோடு.

''ஏம்ப்பா காசு வேண்டாம் என்கிறாய்?''

''இந்த நாட்டிற்காக எவ்வளவோ செய்கிறீர்கள். அப்படிப்பட்ட உங்களுக்கு நான் ஏதாவது என் பங்குக்குச் செய்ய வேண்டுமில்லையா?''

''இந்த நாட்டிற்கு நானொரு வேலைக்காரன். என் கடமையைத் தான் நான் செய்கிறேன். எனக்கு அரசாங்கம் சம்பளம் தருகிறது. அந்தச் சம்பளத்தை வைத்து நான் சாப்பிட்டு விடுவேன். உன்னுடைய வேலை பலூனை விற்பது. பலூனை விற்றுத்தான் உன் வயிற்றுப்பாட்டைக் காப்பாற்றுவாய். அதனால், இனாமாக ஒன்றும் தரவேண்டாம். மொத்த பலூன்களும் எத்தனை ரூபா என்று சொல்'' என்று கேட்டார்.


இனி நாம் என்ன சொன்னாலும் நேருஜி கேட்கமாட்டார் என்பதை உணர்ந்த பலூன் வியாபாரி ''இருபத்தைந்து ரூபா'' என்று சொன்னார்.

நேருஜி தன் சட்டைப் பைக்குள் கைவிட்டுத் துழாவிப் பார்த்தார். வழக்கம்போல அவர் பை காலியாக இருந்தது. தம்மோடு பயணம் செய்த ஒருவரிடம் இருபத்தைந்து ரூபா வாங்கி பலூன் வியாபாரியிடம் கொடுத்தார். கார் செல்லும் திசையில் வரும் சிறுவர்களுக்கெல்லாம் பலூனைக் கொடுத்து மகிழ்ந்தார். அத்தோடு, மிகுதியான ஒரு பலூனை நேருஜியும் குழந்தை போன்று ஊர் சிறுவர்களிடம் வேடிக்கை காட்டி சிரித்து மகிழ்ந்து கொண்டே பயணத்தை மேற்கொண்டார்.

# காந்திஜிக்கு ஏற்பட்ட நிலை

ழக்கமில்லாத செயல்களில் ஈடுபடும்போது ஆரம்பத்தில் குறைகள் ஏற்படுவதுண்டு. அதனால், சில நேரங்களில் பிறரது கேலிப்பேச்சுக்கும் ஆளாக வேண்டிவரும். காந்தியடிகள் அப்படித்தான் முதன்முதலில் தமக்குத் தாமே முடி வெட்டிக்கொண்டபோது கேலிக்கு ஆளானார். இத்தகைய சுவையான சம்பவம் தென்னாபிரிக்காவுக்கு காந்தியடிகள் சென்றபோது நிகழ்ந்தது.

அங்கே வெள்ளை நிறத்தவர்கள் முடிவெட்டும் நிலையங்கள் மட்டுமே இருந்தன. கறுப்பு நிறத்தவரான காந்தியடிகளுக்கு முடிவெட்ட அந்த வெள்ளையர்கள் மறுத்தனர். முடிவெட்டிக்கொள்ளாமல் இருக்கவும் முடியாது. எப்படியும் முடிவெட்டிக்கொள்ள வேண்டும் என்ற நிலை. அதற்கென கத்தரிக்கோல், முடிவெட்டும் மெஷின் போன்வற்றை விலைக்கு வாங்கித் தமக்குத் தாமே முடிவெட்டிக்கொள்ளத் தீர்மானித்தார். அதன்படி நீதிமன்றத்திற்குச் சென்றபோது, அங்கே இருந்த வெள்ளைக்கார வழக்கறிஞர்கள் காந்தியடிகளின் தலையைச் சுட்டிக்காட்டி கைகொட்டிச் சிரித்தனர்.



மீண்டும் மீண்டும் வெள்ளையர்கள் விழுந்து விழுந்து சிரிப்பதைக் கண்டு காந்தியடிகளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் இப்படிச் சிரிக்கின்றனர்? காரணம் என்னவென்று கேட்டுவிட முடிவெடுத்தார். அதற்குள் வெள்ளைக்கார வழக்கறிஞர்களில் ஒருவர், ''என்ன காந்தி! உமது தலைமுடிக்கு என்ன வந்தது? இரவில் நீங்கள் தூங்கும்போது எலி உங்களுடைய தலைமுடியைக் கத்தரித்து விட்டதா?'' எனக் கேட்டு மீண்டும் சிரித்தார்.

வெள்ளையர்கள் இவ்வாறு கேட்டது குறித்து காந்தியடிகள் வருத்தப்படவில்லை. பதிலாக, ''நண்பர்களே! எனக்குச் சேர வேண்டிய பெருமையை எலிக்கு ஏன் கொடுக்கிறீர்கள். அது தவறு. ஏனென்றால், எனது தலைமுடியை வெட்டியது நான் என்பதில் யாருக்கும் எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம். இது முதன்முதலில் எனக்கு நானே முடிவெட்டிக் கொண்டதனால் இப்படியாகிவிட்டது. அடுத்த தடவை பார்க்கும்போது தெளிவாக முடிவெட்டியிருப்பேன்'' என்று சிரித்துக்கொண்டே காந்தியடிகள் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அலிகெடர்' (Alligator) என்பது 200 மில்லியன் வருடங்கள் பழைமைமிக்க ஒரு வகை ஊர்வன இனமாகும். இது கிட்டத்தட்ட முதலை இனத்தின் வடிவை ஒத்ததாகும்.

இந்த 'அலிகெடர்' இனமானது இரண்டு வகையைச் சேர்ந்தனவாகும். ஒன்று அமெரிக்கன் அலிகெடர் என்றும் மற்றையது 'சைனீஸ்' அலிகெடர் என்றும் வகைப்படுகின்றது. அளவில் ஃப்ளோரிடா மாநிலத்தில் இது வாழ்ந்ததாகக் கருதப்படுகின்றது.

சைனிஸ் அலிகெடர் அமெரிக்க அலிகெடரைவிட அளவில் ஓரளவு சிறியது. இதன் நீளம் 7 அடியாக இருக்கின்றபோதிலும் இதனால், மிக வேகமாக ஓட முடியும் என்றும் குறிப்பிடப் படுகின்றது.

சைனீஸ் அலிகெடர்



# பெருமளவு வருமானத்தை ஈட்டித்தரும் 'அலிகெடர்'

மிகவும் பாரியதாகக் காணப்படுகின்ற 'அலிகெடர்'கள் உலகப் பிரபல்யம் பெற்றவை இதனால், 'ஹொலிவூட்' திரைப்படங்களில்கூட இவற்றை அடியொட்டிய திரைப்படங்கள் பல எடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் எடை 350 கி.கிராம் ஆகும். நீளம் 4 மீற்றர், பதிவுகளின்படி உலகிலிருந்த மிகப்பெரிய அலிகெடர் 17 அடி 5 அங்குலம் நீளமுடையதாக இருந்ததாகப் பதியப்பட்டுள்ளது. அமெரிக்காவின்

அமெரிக்கன் அலிகெடர் இனத்தின் பெருக்கத்தை அதிகரிக்க அங்கு பிரத்தியே கமான பண்ணைகள் ஏற்ப டுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் அமெரிக்காவில் அலிகெடர்களை வளர்ப்ப வர்கள் வருடாந்தம் பெரும ளவில் வருமானத்தை ஈட்டு கின்றனர். இத்தனை சிறப்பு

அலிகெடர் தோலில் செய்யப்பட்ட கைப்பை, சப்பாத்து





## முதலையை ஒத்த வடிவில் இது இருக்கும்



அமெரிக்கன் அலிகெடர்

மிக்க அலிகெடரின் இறைச்சி மற்றும் சருமம் சந்தையில் கூடிய விலைக்கு விற்பனை செய் யப்படுகின்றன. வருடாந்தம் அலிகெடரின் தோலானது 45,000 அளவில் சுத்திகரிக்கப் பட்டு தயார்படுத்தப்படுகின்றது. 6-7 அடி வரையிலான இதன் தோல் 300அமெரிக்க டொலர் வரை விலை கோரப்படுகின்றது.

இதன்படி வருடாந்தம் 300,000 இறாத்தல் அளவு அலிகெடர் இறைச்சி உற்பத்தி செய்யப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. எனவே, விலங்கினங் களில் நாம் அறிந்து வைத்திருக்கவேண் டிய ஒரு விலங்கினமாக 'அலிகெடர்' கருதப்படுகின்றது.

# உலகிலேயே சின்னஞ்சிறிய குதிரை!

உலகிலேயே மிகவும் சிறிய குதிரை எங்கு உள்ளது தெரியுமா? அமெரிக்காவின் நியூசெம்ஷயர் பிராந்தியத்திலேயே இந்தக் குதிரை காணப்படுகின்றது. இதன் பெயர் 'அயன்ஸ்டயின்'. இதன் உயரம் 14 அங்குலம் மாத்திரமேயாகும். எடை 6 இறாத்தல் ஆகும். இதற்கு முன்னர் காணப்பட்ட மிகவும் சிறிய குதிரையாக கருதப்பட்ட குதிரைகளின் உயரம் 21 அங்குலமாகவும், எடை 18 இறாத்தலாகவும் இருந்தது.

உலகில் அளவில் மிகவும் சிறிய விலங்கு களாகக் கருதப்படுகின்ற விலங்குகள் பல மூட்டு நோய்களின் காரணமாகவே உயரமாக வளரமுடியாத விலங்குகளாக அடையாளப் படுத்தப்பட்டிருந்தன. ஆனால், 'அயன்ஸ்டயின்' அவ்வாறு அல்ல. அளவில் சிறியதாக இருக்கின்ற போதிலும் ஆரோக்கியத்திலும் அது சிறந்து விளங்குகின்றது. அதிலும் இது குறை மாதத்தில் பிறந்ததல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய ஆச்சரியமிகு சின்னஞ்சிறிய குதிரை சிறுவர்களையும் பெரிதும் கவர்ந்துள்ளதாம்.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010,மே மாதம் 19 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday May 19, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org